www.tamilarangam.net


# களத்தில்

(17.06.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (188) அன்பளிப்பு : 60 p




எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர்வாக பரிணாமம் பெறுகின்றது. இந்தத் தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான தனித்துவமான ஆளுமையைப் பெறுகிறது. இந்தத் தேசிய ஆளுமையைக் கொண்ட மக்கள் இனம்தான் ஒரு அரசை அமைத்துக் கொள்ளும் தகுதியைப் பெறுகிறது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*



# இனி எமது ஒவ்வோர் நகர்வும் இழந்த பிரதேசத்தை மீட்பதாகத்தான் அமையும்

எதிரிகளைத் தடுத்து நிறுத்தி பாதுகாப்பு வேலிகளை அமைத்துள்ளோம். இனி எதிரிகளை அடித்து விரட்டுவதுதான் எமது வேலை என உலர்உணவுப் பொருட்களுடனும், பழவகைகளுடனும் களத்தில் நிற்கும் போராளிகளைக் காணச்சென்ற முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றும் போது தளபதி கேணல் தீபன் அவர்கள் கூறியுள்ளார். மாணவர்களாகிய நீங்கள் களப்பகுதிக்கு வந்துள்ளமையானது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், எமது போராளிகளுக்கு புதிய உற்சாகத்தினையும் கொடுத்துள்ளது.

நாங்கள் இன்று எதிரிகளைத் தடுத்து நிறுத்தி நீண்டபாதுகாப்பு வேலியை அமைத்துள்ளோம். இன்று உண்மையிலேயே எதிரி, போராளிகள் நிற்கும் பகுதிகளை நோக்கி எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ள முடியாதளவிற்கு எங்களின் இராணுவரீதியான சண்டை ஆற்றல் வளர்ந்துள்ளது. எதிரி எமது பாதுகாப்பு வேலியைத் தாண்டி வரமுடியாத அளவிற்கு நாம் பலமடைந்து உள்ளோம். எதிரி இன்று எந்த இடத்தை நோக்கி முன்னேறியுள்ளான், ஆக்கிரமித்துள்ளான் என்று பார்த்தால் உங்களுக்கு உண்மை விளங்கும். இன்று எதிரியின் மனநிலையைப் பொறுத்தவரையில் எங்கு போராளிகள் இல்லையோ அந்த இடத்தைத்தான் படைகளை நகர்த்தி இடங்களை ஆக்கிரமிக்கக் கூடியதாகவுள்ளது. ஆக போராளிகள் நிற்கும் எந்த வொரு பிரதேசத்தையும் படையை நகர்த்தி ஆக்கிரமிக்கக் கூடிய துணிச்சல் எதிரியிடமில்லை. இந்தப் போரில் நாங்கள் நிச்சயம் வெல்வோம். எங்கள் படையணியைப் பெருக்குவதன் மூலம் எதிரியின் ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியும். இன்று தேசியத் தலைவர் அவர்களினால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் எந்தவொரு இராணுவ நகர்வும் தமிழீழத்தை நோக்கியதாகத்தான் நகர்ந்து கொண்டுள்ளது. இனி போராளிகளின் ஒவ்வோர் நகர்வும் இழந்த பிரதேசத்தை மீட்பதற்காகத்தான் அமையப்போகின்றது. இனி எந்தவொரு பிரதேசத்தையும் இழக்க முடியாத அளவிற்குத்தான் எமது பலத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு தளபதி தீபன் அவர்கள் உலர் உணவுப் பொருட்களுடனும், பழவகைகளுடனும் கள

தொடர்ச்சி 13ம் பக்கம்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# நம் பொறுப்பு உணர்வோம்

தமிழீழ மக்கள் பிரச்சினையின் இன்றைய நிலை என்ன? தமிழீழ மக்கள் தங்கள் தாயகத்தில் தாம் பாதுகாப்பான அமைதியுடன் வாழ்வதற்குரிய சகல தகைமைகளையும் கொண்ட மக்கள் என்பதை நிரூபித்து தமது அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்க உறுதிபூண்டு நிற்கின்றனர்.

ஆனால் தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிறீலங்காவோ இந்த உண்மைகளை மறுத்து, மறைத்து தனது ஆளுமைக்கு தமது அரசியல் பணிவை வெளிப்படுத்துகின்ற மக்களாகவே தமிழீழ மக்களை உலகிற்கு காட்டிட, தமிழீழ மக்கள்மேல் ஆயுத அடக்குமுறைகளையும் இனஅழிப்பு, இனத்துன்புறுத்தல் என்பவற்றை மையமாக கொண்ட தமிழீழ மக்கள் மீதான இராணுவ முற்றுகைகளையும் தமது அரசியல் செயற்திட்டமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இதனை முறியடித்து தமிழீழ மக்களுக்கு பூரண விடுதலையை - பாதுகாப்பான அமைதி வாழ்வை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை தமது அரசியல் செயற்திட்டமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசான தமிழீழ விடுதலைப் புலிகள்.

இந்நிலையில் தமிழீழ மக்கள் பிரச்சினை எவ்வாறு தீர்வு பெறமுடியும்? என்ற முக்கியமான கேள்வி இன்றைய உலக அரசியலிலும் தலைதூக்கியுள்ளது. ஆனால் இதற்கான தீர்வு தமிழீழ மக்களால் 1976ல் முன்வைக்கப்பட்டு 1977 பொதுத் தேர்தலில் குடியொப்பத்தால் உறுதியாக்கப்பட்டது.

தமிழீழத் தாயகத்தின் நாட்டெல்லைகளை சிங்கள நாட்டெல்லைகளுடன் இணைத்து பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கிய ஐக்கிய இலங்கை என்ற ஒற்றையாட்சி முறை கால் நூற்றாண்டுகளாக கொடுத்த அனுபவங்கள் தமக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வை ஏற்படுத்த ஆற்றல் அற்றதாக காணப்பட்டதன் விளைவாகவும் - 1972ல் காலனித்துவம் தமிழ் சிங்கள தேசமக்களின் ஒற்றையாட்சி ஜனநாயக செயற்பாட்டுக்காக ஏற்படுத்திய சோல்பரி அரசியல் அமைப்பினை சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் மீறி சிறீலங்கா என்னும் சிங்கள பௌத்த குடியரசாக முழு இலங்கையையும் பிரகடனப்படுத்தியதன் விளைவாகவும் - தமது தாயகமான தமிழீழத்தில் தமது அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்க உறுதிபூண்டனர். சிறீலங்கா பாராளுமன்றத்தில் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரகடனப்படுத்தி அதில் இருந்து விலகினர். தமது தமிழீழ நாட்டுக்கான அரசியல் அமைப்பை உருவாக்கிட 1977 தேர்தலில் குடியொப்பம் அளித்தனர். இதனை சிங்கள மக்களுக்கும் உலகிற்கும் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்றவகையில் வெளிப்படுத்திய தமிழீழ மக்கள் இந்த தமிழீழ அரசினை ஜனநாயக வழிகளிலோ அல்லது போராட்டம் மூலமோ அடைவர் என்பதை மிகத்தெளிவாகப் பிரகடனம் செய்தனர்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் போலவே தமிழீழ மக்கள் தமிழீழ அரசை மீள நிறுவுவதை சிறீலங்கா பல வழிகளில் இலங்கைத் தீவில் தடுத்து வருகின்றது. முதலாவது இராணுவ முற்றுகைகளை தமிழீழ மக்கள் மேல் ஏற்படுத்தி அவர்களை இனஅழிப்புகளுக்கும் இனத்துன்புறுத்தல்களுக்கும் தொடர்ச்சியாக உள்ளாக்கி அவர்களின் அரசியல் பணிவைப் பெற்றுவருவதாகக்காட்டி தமிழீழ மக்களை சிறீலங்காவின் குடிமக்களாக உலகிற்கு தொடர்ந்து காண்பித்து வருகின்றது. தமிழீழத் தேசத்தின் உட்கட்டுமானங்களை அழித்து தமிழீழத்தை மீள அமைத்தல் என்ற இலக்கையே நாசமாக்க முயன்று வருகின்றது. தமிழீழத் தேச மக்களின் தேசிய பாதுகாப்பினை இல்லாதொழிக்க அவர்களின் அரசு நோக்கிய அரசின் பொறுப்பாளிகளாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ நடவடிக்கைளால் அழிக்கவும் அவர்களையும் தமிழீழ மக்களையும் வேறுபிரிக்கவும் பகீரதப் பிரயத்தனங்களில் தொடர்ந்தும் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது. மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்தல் என்ற கொடிய மனிதாபிமானமற்ற செயற்திட்டத்தின் விளைவுகளாக உணவை ஆயுதமாக்கியும் மருந்துகள் உட்பட உயிர்வாழ்தலுக்கான அனைத்து அத்தியாவசிய பொருட்களைத் தடுத்தும் இயற்கைச் சூழ்நிலைகளை உருக்குலைத்தும் சர்வ தேசச் சட்டங்களுக்கு எதிரான வகையில் தமிழீழ மக்களுக்கு சொல்லொணா மனிதவதைகளைப் புரிந்து வருகின்றது.

இந்த சர்வதேச சட்டங்களுக்கு எதிரான - மனிதாயத்திற்கு எதிரான- இனஅழிப்பை அரசியல் செயற்திட்டமாக்கும் சிறீலங்காவின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் தொடர்ந்தும் சர்வதேச நாடுகளின் - அமைப்புக்களின்- ஒத்துழைப்பைப் பெறுவதற்கு சிறீலங்கா சர்வதேச மட்டத்தில் நான்கு தளங்களில் செயற்பட்டு வருகின்றது. முதலாவது, இலங்கைத் தீவை சர்வதேச இராணுவ பொருளாதார வல்லாண்மையாளர்களின் நடவடிக்கைகளின் களமாக மாற்றுவதன் மூலம் அவர்களின் அக்கறைகளின் அடிப்படையில் தனக்கான இராணுவ வலிமையை ஆக்கிரமிப்புத் திறனை பெருக்கிக் கொள்வது. இரண்டாவது, உலக இராணுவ கைத்தொழிலாக்கத்தின் ஆயுத இராணுவ தளபாடங்களின் சந்தையாக தனது அரசாங்கத்தை மாற்றி தமிழீழ மக்கள் மேலான யுத்தத்தை தொடர்ந்து நடாத்தி அவர்களை அடிமைப்படுத்த முயற்சித்து வருகின்றது. மூன்றாவதாக, முதலாவது இரண்டாவது காரணங்களால் சிறீலங்காவின் இராணுவ நலன்களுக்கும் இன அழிப்பு போக்கிற்கும் ஆதரவு வழங்கி வரும் நாடுகளினதும் உலகினதும் மனச்சாட்சி உள்ள மக்களின் மனங்களைத் திசைதிருப்பி உலக மக்கள் ஆதரவு தமிழீழ மக்கள் பால் திரும்பாது தடுப்பதற்கான சர்வதேச சதி வலைகளை, தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனத்திரிபுபடுத்தி காட்டுவதன் மூலம் அடைவதற்கான சர்வதேச பரப்புரைகளைச் தொடர்ந்தும் தொடர்ந்தும் பல கோணங்களில் செய்து வருகின்றது. நான்காவதாக சிறீலங்காவின் இனஅழிப்புகளுக்கும் இனத் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகியும் கண்கண்ட சாட்சிகளாகியும் அந்த சிறீலங்கா அரசபயங்கரவாதத்தின் இனங்காணக் கூடிய அச்சத்தால் நாட்டைவிட்டு இடம்பெயர்ந்து சர்வதேச நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி வாழும் புலம்பெயர் தமிழீழ மக்கள், தமது மக்களின் உண்மைக் குரலாகவும் துன்பம் துடைக்கும் கைகளாகவும் மாறுவதை தடுக்கும் நோக்கில் சர்வதேச நாடுகளில் தனது சக்திகளைப் பயன்படுத்தப் படாதபாடுபட்டு வருகிறது. சற்று ஆழமாக கூறுவதானால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழீழ மக்களை செயற்திறன் அற்றவர்கள் ஆக்குவது என்பதே சிறீலங்காவின் அரசியல் செயற்திட்டம். இதற்கான இராணுவ நலன்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உறுதிப்படுத்திக் கொள்வதிலேயே சிறீலங்கா அன்றும் இன்றும் செயற்படுகிறது. இப்போக்கினை மாற்றிக் கொள்வதற்கான எந்தத் தன்மையையும் சிறீலங்கா இன்றுவரை வெளிப்படுத்தாததினால் என்றும் இதுவே சிறீலங்காவின் நோக்காகப், போக்காக இருக்கப்போகின்றது. இந் நிலையில் சிறீலங்கா உச்சரிக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் - தீர்வுதிட்டங்கள்- என்ற அனைத்துச் சொற் தொடர்களுமே இந்த நோக்கத்தினை மையப்படுத்திய செயற்திட்டங்களாக அமைந்தன- அமைகின்றன- அமையப்போகின்றனவே தவிர அவை என்றுமே தமிழீழ மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது என்ற நோக்கையோ போக்கையோ கொண்டிருக்க மாட்டா என்பதை அனைவரும் அறிவர்.

இந்நிலையில் தமிழீழ மக்கள் தங்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக மனித உரிமை வன்முறையாகத் - தங்கள் மேல் திணிக்கப்பட்டுள்ள யுத்தத்தை எதிர்த்து போராடுவதனாலேயே உயிர் வாழும் - உடமைகளைப் பேணும்- சுதந்திரத்தை நிறுவும் நிலையில் உள்ளனர். இந்தப் போராட்டத்தின் வெற்றிகரமான வளர்ச்சியின் வெற்றிக்கு முக்கிய தேவையாக இருப்பது தமிழீழ வான் பரப்பின் மேல் சிறீலங்கா நடாத்தி வரும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் வல்லமையை வளர்ப்பதாகும். இந்த தேவைக்குரிய வழங்கல்கள் என்ன வீதத்தில் எவ்வளவு விரைவாக வழங்கப்படுகின்றதோ அவ்வளவு வீதத்தால் அவ்வளவு விரைவில் தமிழீழ மக்களை சிறீலங்கா தாக்கும்திறன் குறைக்கப்படும். வான்படை கொண்டெழுந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்கலங்களின் வளர்ச்சிவீதம் என்பது புலம்பெயர் தமிழீழ மக்களின் பங்களிப்புகளின் எழுச்சி வீத்தில் தங்கியுள்ளது. அதே போல தமிழீழ மக்களின் பிரச்சினை என்பது சிறீலங்கா அவர்களுக்கு பாதுகாப்பான அமைதி வாழ்வை வழங்க ஆற்றல் அற்ற அரசாகத் திகழ்வதன் அடிப்படையில் எழுந்தது. ஆகையினால் சிறீலங்கா படைகளின் தமிழ் மக்கள் மத்தியிலான நிலைகொள்ளல் எல்லாவிதத்திலும் தமிழ் மக்கள் மேலான இனஅழிப்பை இனத்துன்புறுத்தல்களை வேகப்படுத்துமே தவிர அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் தன்மையை என்றுமே தோற்றுவிக்க மாட்டாது என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் கூறி சிறீலங்காப் படைகளின் விலகல் மூலமே தமிழ் மக்கள் பாதுகாப்பான அமைதியை பெறமுடியும், இதற்கான வகையில் சர்வதேச சிந்தனைகளை நெறிப்படுத்தல் என்ற பெரும் பொறுப்புள்ளவர்களாக புலம் பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உள்ளோம். நமது தமிழீழ வான்படை வளரவும் சர்வதேச அழுத்தங்களை சிறீலங்கா மேல் தோற்றுவித்து சிறீலங்காப் படைகள் அகலவும் உழைத்திட உறுதி பூணுவோம். தமிழீழத் தாயகத்தை மீள நிறுவுதல் என்ற தீர்வு தமிழீழ மக்களின் ஆணை. இந்த மக்கள் ஆணையினை அடைவதற்காகச் செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக உள்ளனர். இந்த இயக்கத்தினை சர்வதேச அமைப்புக்கள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக அங்கீகரிப்பதன் மூலமே தமிழீழ மக்கள் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஏற்படும் சூழ்நிலை உருவாகும். இதற்காக குரல் கொடுத்து தமிழீழ மக்களையும் விடுதலைப் புலிகளையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரித்துக்காட்டும் சிறீலங்காவின் சதிக்கு முற்றுப் புள்ளி வைப்போம். இவை நம் பொறுப்புக்கள் என உணர்ந்து செயற்படுவோம்.





| | | |
|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. |
| **FRANCE**<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | **ITALY**<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>Grt. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. |
| **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவத் தலைமையில் குழப்பம்

## – ஜெயசிக்குறுய் ஏற்படுத்திய தாக்கம் –

போரையே தீர்வுக்கான மூல ஆயுதமாகக் கொண்ட சந்திரிகா அரசு இப்போர் மூலமான இலக்கை அடைவதற்கு ஏற்படும் தடங்கல்களால் உட்சர்ச்சைகளில் சிக்குண்டு போயுள்ளது.

வன்னியின் மேற்குப் பிரதேசம் ஊடாக ஒரு பாதை திறப்பை நடத்த சிங்களத் தரைப்படை முயன்று வருகின்றது. இலக்கு குறிப்பிடப்படாத 'ரண கோச' மன்னார் விடத்தல் தீவுவரை நகர்ந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. பூநகரியைக் கைப்பற்றுவதற்கான ஒரு தரை - கடல் நடவடிக்கை புலிகளினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஆனால் வன்னியின் மேற்குப் பகுதியான கொக்கிளாய் பகுதியில், சிங்களத்தின் போர் உத்திகளை பாதுகாக்கும் குடியேற்றத் திட்டப்பகுதிகளில், இராணுவ வாகனங்களைக் குறிவைத்து நடாத்தப்படும் கிளைமோர் தாக்குதல்கள் அப்பகுதிகளில் பெரும் இராணுவ அழுத்தத்தை தோற்றுவித்துள்ளது. யால சரணாலயப் பகுதியில் இராணுவத்தை நிறுத்துமாறு பௌத்த மதகுரு தலைமையில் விடுக்கப்பட்ட வேண்டுதல்கள் மற்றுமொரு பிரிவு இராணுவத்தை அப்பகுதிகளுக்கு நகர்த்துவதற்குரிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

தரையில் போரை நடாத்தியபடியே கடல்வழியூடான புலிகளின் விநியோகப் பாதையை தடுப்பதற்கான போர்த்திட்டமானது துரிதகதியில் பெரும் கடற்கல கொள்வனவுகளுடன் முடுக்கி விடப்பட்டுள்ளது. இவ்வாறான புதிய உத்திகளுடனான போர்த்திட்டங்களை வகுத்துவரும் சிங்கள அரசு போரை நடத்துவதற்குரிய மூலதேவையான ஒன்றிணைக்கப்பட்ட இராணுவ திட்டங்களைப்பற்றிய உட்சர்ச்சையில்



சிக்குண்டு போயுள்ளது.

வெறும் 25 பில்லியன்களாக இருந்த போர் செலவீனத்தை இரட்டிப்பாக்கி தனது மாமனார் ரத்வத்தையின் தலைமையில் போரை நடத்திய சந்திரிகா 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையினால் ஏற்பட்ட தோல்வியின்பின் இராணுவ விடயங்களில் ஏற்பட்டுள்ள விரிசல்களை நிரப்ப முயன்றார். நீண்ட கடுமையான ஜெயசிக்குறுய்ச் சமர் தரைப்படையினுள் பலத்த உள்விவாதங்களை எழுப்பியது. அரசியல் நோக்கத்திற்காக சந்திரிகா - ரத்வத்தை அணியினர் போரை நடத்துவதாக விசனம் எழுந்தது. அப்போதைய தரைப்படைத் தளபதி ரோகான் தளுவத்தைக்கும்



வன்னி நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தளபதி சிறீலால் வீரசூரியாவுக்கும் இடையே விரிசல் தோன்றியதாக பத்திரிகைகள் எழுதின. ரத்வத்தையின் அதீதமான கட்டளையிடும்

**நீண்ட கடுமையான ஜெயசிக்குறுய்ச் சமர் தரைப் படையினுள் பலத்த உள்விவாதங்களை எழுப்பியது. அரசியல் நோக்கத்திற்காக சந்திரிகா – ரத்வத்தை அணியினர் போரை நடத்துவதாக விசனம் எழுந்தது. அப்போதைய தரைப்படைத் தளபதி ரோகான் தளுவத்தைக்கும் வன்னி நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தளபதி சிறீலால் வீரசூரியாவுக்கும் இடையே விரிசல் தோன்றியதாக பத்திரிகைகள் எழுதின.**

போக்கு தொழில் முறை இராணுவ உயரதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது. புலிகள் தொடர்ச்சியாக ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கு கொடுத்த அழுத்தம் இவ் விரிசலை ஆழப்படுத்தியது. சனாதிபதிக்கும் ரத்வத்தைக்கும் இடையேகூட விரிசல் ஏற்படும் தீவிரத்தை புலிகள் ஏற்படுத்தினர்.

சூரியக்கதிர் நடவடிக்கையினால் 'ஜெனரல்' பட்டம் பெற்ற ரத்வத்தை இராணுவக்கட்டுப்பாட்டை தளுவத்தையிடமோ சிறீலால் வீரசூரியவிடமோ கொடுக்கத்தயாராகவில்லை. மாறாக தன்னை அடுத்தடுத்த இராணுவத் திட்டங்களுடன் ரத்வத்தை அடையாளம் காட்டினார். சந்திரிகாவின் அரசியல் தேவைகளுக்கு ரத்வத்தையின் போக்கு ஒத்துவரினும் இராணுவத் தேவைகளுக்கு ஒரு மாற்றுவழியைத் தேட அவர் முற்பட்டார்.

1999 ஜனவரி ஆறாம் திகதி ஓய்வு பெற்ற தொழில்முறை இராணுவத் தளபதி ரோகான் தளுவத்தையை கூட்டு நடவடிக்கைகளுக்கான திணைக்களம் (J O B) என்ற புதிய சிவிலியன் நிர்வாகத்தின் தலைவராக்கினார். இத்திணைக்களத்தின் இலக்கு-நோக்குப் பற்றி எதுவித தீவிரமான அறிவித்தல்களையும் விடுக்காத அரசு, வெறுமனே போரின் தீவிரத்தை எதிர்கொள்ள தளுவத்தையின் ஆலோசனையும் வழிகாட்டலும் தேவை என்ற நோக்கில் செயற்பட்டது. இது சனாதிபதிக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையே செயற்பட்டுவந்த ரத்வத்தையின் நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தியது. இக் கூட்டு நடவடிக்கைகளுக்கான திணைக்களத்தினை ரத்வத்தையும் பிற தளபதிகளும் தமது செயற்பாடுகளுக்கான தலைமையகமாக அல்லது ஒன்றிணைக்கும் மையமாக ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக ரத்வத்தை இராணுவ உலங்குவானூர்திகளில் வன்னிக்குப் பறந்து வந்தார். 'ரண கோசா' ஆரம்பமானது. மேற்குப் பகுதியூடாக மண்பறிப்பில் இராணுவம் ஈடுபட்டது. இதனை அனுமதித்த சந்திரிகா தளுவத்தையை ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் இராணுவப் பொறிமுறைபற்றி ஆராய அனுப்பினார். ஈற்றில் கடந்த 31.05.1999முதல் ஒரு சிறப்பு அறிவிப்பு மூலம் புதிய கூட்டு நடவடிக்கைகளுக்கான தலைமையகத்தை சந்திரிகா நிறுவினார். ஓய்வு பெற்ற தளபதியான தளுவத்தை மீள இராணுவத்திற்கு அழைக்கப்பட்டு பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவராக (Chief of Defence Staff) நியமிக்கப்பட்டார். முப்படைகளின் தலைவர்களும் பொலிஸ் தலைமையும் உளவுத்துறைகளும் இப்புதிய தலைமையகத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. இது போரை தீவிரமாக-ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் நடாத்த சந்திரிகா எடுத்த முடிவாகும். ஜெயசிக்குறுய் தோல்விக்குப்பின் தொழில் சார் இராணுவத் தலைமையிடம் முழு நடவடிக்கைகளுக்குமான பொறுப்பை ஒப்படைத்தால் மட்டுமே புலிகளை வெல்லலாம் என்ற பொது சிங்களக் கருத்தை ஒத்ததாக இது அமைந்தது. ஆனால் இம் முடிவு சிங்கள போர் இயந்திரத்தின் தலைமையில் ஏற்பட்டுள்ள விரிசல்களால் ஜீரணிக்கப்படமுடியாதவை ஆகிவிட்டன.

கொழும்புக்குப் பயணம் செய்த பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரிகள் குழு இராணுவ அமைச்சின் செயலாளரிடம் சிறீலங்கா முப்படைகளினதும் ஒருங்கிணைக்கப்பட்ட தன்மையைப்பற்றி கேள்வி எழுப்பிய போது தான் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான தலைமையகம் பற்றிய முடிவை செயலாளர் வெளியே கசிய விட்டார். இது முப்படைத் தளபதிகளுக்கும் கூட புதினமாக இருந்தது என சண்டே ரைம்ஸ் இராணுவ ஆய்வாளர் கூறினார். இம் முடிவை எதிர்த்து ரத்வத்தை நடத்திய உட்சர்ச்சையின் வெளிப்பாடாக சனாதிபதி சந்திரிகா மற்றுமொரு அறிவிப்பை வெளியிட்டார்.

இவ் அறிவிப்பின் மூலம் கூட்டு நடவடிக்கைக்கான தலைமையகத்திற்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அது வெறும் ஆலோசனை மையமாக மாற்றப்பட்டது. முப்படைகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் தளபதி ரோகான் தளுவத்தையிடம் இருந்து பறிக்கப்பட்டது. அவர் பொது கட்டளை அதிகாரியாக (G O C) நியமிக்கப்பட்டார்.

இவ் இறுதியான அறிவிப்பானது முப்படைத்தளபதியான சனாதிபதிக்கும் போர்முனைத் தளபதிகளுக்கும் இடையே அநாவசியமான ஒரு பிரிவை அமைக்கும் திட்டம். இது இறுதியில் குழப்பத்தில்தான் முடியும் என ஒரு இராணுவ உயரதிகாரி கருத்துக் கூறியுள்ளார். இராணுவத்தின் செயல் குறையும் தன்மைக்கு இது வழிவகுக்கும் என அவர் கூறியுள்ளார்.

இக் குழப்பமும் - உட்சர்ச்சைகளும் புலிகள் தொடர்ச்சியாக எதிர்ப்படைகள்



மீது ஏற்படுத்திவரும் அழுத்தங்களின் விளைவுகள் எனக்கருதலாம். புதிய போர் உத்திகளுடனும், வீராப்புடனும் பதவியைப் பிடித்த சந்திரிகா இன்று எமது தேசியத்தலைவரின் போர் வியூகத்தினுள் அகப்பட்டு குழப்பமான போர்த்திட்டங்களுடன் என்ன செய்வது என விழிபிதுங்கும் பலவீனமான நிலையில் உள்ளதை முன்னைய சனாதிபதிகளின் இத்தகைய நிலைகளுடன் ஒப்பிட்டு ஐலண்ட் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

முன்பு ஜே.ஆர் ஜெயவர்த்தனா இக் கூட்டுப்படைத் தலைமையகத்தை நிறுவினார். பின் ஒவ்வொரு சனாதிபதிகளும் இதனை மாறிமாறி உருமாற்றி தோல்விகண்டனர். ஜெனரல் சிறில் ரணதுங்க, லெப்.ஜெனரல் திஸ்ஸவீரதுங்க, ஜெனரல். ஹெமில்டன் வணசிங்க போன்றோர் ஓய்வுக்குப் பின் புலிகளை வெல்வதற்காக மீள அழைக்கப்பட்டு தோல்விகண்டவர்களாவர். இன்று ரோகான் தளுவத்தை மீள அழைக்கப்பட்டும் விழிபிதுங்கி நிற்கும் இராணுவ இயந்திரத்தின், எந்தப் பகுதியில் தன்னை நிலை நிறுத்துவது என தெரியாது நிற்கவைக்கப் பட்டுள்ளார்.

**நாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தியாக திரவியம் சிவகுமாரன்

எத்தகைய துன்பம்வரினும் தமிழீழத் தாயகம் இன்ப நிலையைக் காண்பதற்கு துணிவாற்றி நிலை காண்பாராகி நின்ற வன் தியாகி சிவகுமாரன். உரும்பிராய் நகரில் பொன்னுத்துரை – அன்ன லெட்சுமி தம்பதியருக்கு அருந்தவப் புதல்வனாக 26-08-1950ல் தோன்றி னான். பெற்றோரால் திரவியம் என்று அழைக்கப்பட்டான். தமிழீழத்தின் திர வியமாக வாழ்ந்து காட்டினான். பண் தமிழ் பாலை உண்டு தவழ்ந்தான். வலி மையை இளமையில் உணர்த்தி வளர்ந் தான். கல்வியில் சிறந்து விளங்கி னான். தமிழர்க்கு இன்னல்கள் விளைந் தால் சங்காரம் மிகமென்று போர் முரசம் கொட்டி அரணாக நின்றான். தமிழீழ விடுதலைப்புலிகளினால் மிகவும் வேக மாகவும், நிதானமாகவும், உயிர்த் தியாகம் நிறைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்த்தெடுக் கப்பட்ட போதிலும் ஆரம்பகாலத்தில் போராட்டத்திற்கான எழுச்சியினை ஏற்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்க வன் பொன். சிவகுமாரன் என்றால் அது மிகையாகாது.

சிறுவயதிலே அநீதிகளை எதிர்த் தல், தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி, சமூக மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, சமய சீர்திருத்தங்கள் போன்றவற்றில் ஈடுபடுவதே அன்றைய அவனது வாழ்க் கைக் குறிக்கோள்களாகின. ஆயினும், இவ்வாறான அவனது தமிழ் சீர்திருத் தப் போராட்டத்திற்கு தடைக்கல்லாக இவனது சிறைச்சாலை வாழ்வு அமைந் திருந்தது. ஆயினும் சிறை மீண்ட சிறிது காலத்தில் தனித்தமிழ் நாடு ஒன்று அமைப்பதே இவனது பெருமூச் சாக உடலெங்கிலும் இளையோடி இருந் தது. சோதனைகள் வரும்வேளை துணி வோடு அதனை எதிர்த்து சாதனையாக் கிக் கொள்வதும், அநீதி தலைத்தோங் கும்போது அதனைக் களைந்து நீதியை நிலை நாட்டுவதுமே இவனது இயற் குணங்களாகின.


இவ்வாறான அதர்மப் போக்கை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய செயல் கள் ஒன்றா, இரண்டா எண்ணில் அடங் காதவை. ஒருமுறை நல்லூர் கோயி லில் திருவிழா நிகழ்ந்து கொண்டி ருந்தபோது கூட்ட நெரிசலினைப் பயன்படுத்தி சிங்களப் பொலிசார் பெண்களிடம் அநாகரிகமான முறை யில் நடந்து கொள்ளத் தலைப் பட்டனர். அப்போது கூட்டத்தில் இருந்த சிவகுமாரன் அவர்கள் மீது பாய்ந்தான். விளைவு, பொலிசார் அவனைக் கைது செய்து நல்லூர்க் கோயிலில் தற் காலிகமாக அமைக்கப்பட்டு இருந்த பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று அடைத்தனர். அங்கே பொலிசாருக்கும் அவனுக் கும் கலகம் ஏற்படுகிறது. நிலைமை மோசமாகவே பல பொலிசார் கூடி அவனை மடக்கிப் பிடித்து ஜீப் வண்டியில் ஏற்றி யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சிறையில் வைத்தனர். மூன்று நாட்களின் பின் அவனைத் தாயார் பிணையில் எடுத்து வீட்டிற்கு அழைத் துச் சென்றார்.

இவ்வாறாக, அநீதிகளை எதிர்க்கும் குணம் கொண்ட சிவகுமாரன் அமைதி வழிப் போராட்டப் பாதையினை நிராக ரித்துவிட்டு, ஆயுதம் ஏந்திப் போராடி னால்தான் ஈழத் தமிழர்கள் இழந்த உரிமைகளை, சுதந்திரத்தைப் பெற முடியும் என்ற முடிவுடன் 1971ம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவை யில் சேர்ந்து தன்னோடும் ஒரு சில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு சிங்கள அரசையும், தமிழ்த் துரோகிகளையும் எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங் கினான்.

1971, 1972ம் ஆண்டுகளில் தமிழ்ப் பிரதேசங்களில் நடை பெற்ற வன்முறைச் சம்பவங்க ளுக்காக மாணவர் பேரவையைச் சேர்ந்த 42 பேர் கைது செய்யப்பட் டார்கள். சிவகுமாரனின் வழக்கு சாட்சியங்கள் இல்லாமையினா லும், நிரூபிக்கப்படாமையினாலும் தோல்வியடைந்தன. சிவகுமாரன் சிறையிலிருந்து வெளியே வருகி றான். 1973ம் ஆண்டு குடியரசு தினம். தமிழீழ வரலாற்றில் மறக்க முடியாத நாள். தமிழ்த் தலைவர் கள் பலர் இதனைப் புறக்கணிக்கும் படி வேண்டினார்கள். ஆயினும் சில துரோக எண்ணம் கொண்ட வர்கள் இதனை ஆதரித்து, அதற்கான ஆயத்தங்களையும் செய்தார்கள். இந் நாளில் சிங்களவர்களின் சின்னமான சிங்கத்தினைத் தாங்கிநிற்கும் இலங் கைத் தேசியக் கொடி நிகழ்வின் போது இரு மருங்கிலும்கட்டி விழா கொண் டாடினார்கள். அத்தருணம் இவர்க ளுள் சிலரைப் பார்த்து சிவகுமாரன் ஏன் உங்களுக்கு இந்த வேலை.... ச்சீ.... வெட்கமா இல்ல....? என்று மனச் சீற்றத்துடன் கேட்க, இவனின் இறு மாப்பு சொல்லுக்கு அனைவரும் மௌனமாகினர். அச்சொல்லைக் கூறிவிட்டு அவன் சென்ற பின்பு அவர் களுள் சிலர் இவனுக்கு கட்டாயம் நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்று கூறி எச்சரிக்கையினையும் தமக் குள் பரிமாறிக் கொண்டனர். ஆனால் இந்தப் பரிமாற்றச் செய்தியினை ஏதோ விதமாக கேட்ட இவன்

'யார் எனக்குப் பாடம் படிப்பிக்க விரும்பினீங்க? துணிந்தால் எனக்கு முன்னுக்கு வாங்கோ' என்று மிகுந்த கோபத்துடன் ஒரு துண்டுக் கயிற்றின் நுனியிலே கல்லைக்கட்டி அத்தேசி யக் கொடியின் மீது எறிந்து கொடி யினை கீழே எடுத்து அதனைப் பல நூறு துண்டுகளாக கிழித்து எறிந்தான். அது மட்டுமல்லாது யாரும் கேட்டா இதனைச் சிவகுமாரன்தான் செய்தான் என்று சொல்லுங்கோ. நான் வீட்டிலே தான் இருப்பன் என்று வைராக்கிய மொழியை மொழிந்து விட்டு வீட் டிற்கு போய்இருந்தான்.

அது 1974ம் ஆண்டு தமிழர் பலர் அமிழ்த்தினுமினிய தமிழ் மொழிக்கு ஆராய்ச்சி மாநாடு நடாத்திய பொன் நாள் அது. அந் நிகழ்விற்காக வேண்டி பல தேசங்களிலிருந்தும் பல அறிஞர் பெருமக்கள் வரவழைக் கப்பட்டிருந் தார்கள். அந்நாளில் தொண்டர் அவைக்கு சிவகுமாரன் தலைமை தாங்கிக் கொண்டிருந்தான். நிகழ்வும்



சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அந் நாளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுத் திகழும் அறிஞர் பலர் தமிழ ரையும், தமிழ் மொழியையும் பற்றி புக ழுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

இவைகளை அதாவது தமிழையும், தமிழின் சிறப்புப் பற்றியும் உலகெங்கி லும் இருந்து வந்த அறிஞர்கள் பேசு வதனை பொறுக்க முடியாத இலங்கை அரசு கண்மூடித் தனமாக பல கண் ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி, துப் பாக்கியினால் சுட்டு அதில் ஒன்பது பேரைக் கொன்று அவ்விடத்தினை சுடுகாடாக்கியது.

சிறிது கணத்தின் பின் அவ்விடத் திற்கு வந்த சிவகுமாரனுக்கு கிழிந்த ஆடைகளும், மக்களினது உடமைக ளுமே எதிர்ப்பட்டன. இதனால் .வேத னையும் மிகுந்த வேட்கையும் அடைந் தான். இதன் நிமிர்த்தமாக அன்று இரவு ஒரு மணியளவில் இரண்டு கைக் குண்டுகளுடன் பொலிசாரைத் தேடி நகருக்குள் புறப்பட்டான். ஆனால், அன்று ஒரு பொலிசார் கூட இவன் கண்களுக்குப் புலப்படவேயில்லை. ஆனாலும் அருளம்பலத்தின் வீட்டடை நோக்கிச் சென்று உள்ளே செல்லத் தடுத்த காவலாளிகளை நோக்கி இரு கைக் குண்டுகளையும் எறிந்து அவர்க ளது கால்களைச் சிதைத்தான். 1974ம் ஆண்டின்பின் சிவகுமாரன் முற்று முழுதான பயங்கரவாதி என இலங்கை அரசினால் குற்றஞ்சாட்டப்பட்டான். இந்நாட்களில் இவனைப் பற்றி தகவல் தந்தால் சன்மானம் தருவதாகவும் அரசு அறிவித்திருந்தது.

அதற்காக அரசும் பல மாய வலை களை வீசியிருந்தது. ஆனால், முடி வில் தோல்வியையே சந்தித்து இருந் தது. இக்காலப் பகுதியில் இலங்கை அர சிற்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கட்டத்தில் சிவகு மாரனுக்கு பணம் தேவைப்படு கிறது. இதற்காக தனது சகாக்கள் மூவரையும் தன்னோடு இணைத் துக் கொண்டு பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபடலானான். அவ்வேளையில் சிறீலங்கா பொலி சாருடன் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டது. துப்பாக்கி ரவைகள் தீருமட்டும் சண்டை செய்தான். முடிவில் ரவை தீரும் பட்சத்தில் தான் உயிருடன் எதிரியிடம் அகப் படக்கூடாது என்று எண்ணி சய னைட் அருந்தி வீரச்சாவு அடைந் தான்.

சிவகுமாரனின் இவ்வுயிர்த் தியாக நிகழ்வானது தமிழர் வர லாற்றில் மறக்க முடியாத வரலாற் றுப் பதிவாகியது. தமிழர்போராட்ட வரலாற்றில் இவன் ஓர் சக்தியாக விளங்கினான் என்றால் அது மிகையாகாது. இந்த தியாக மறவ னின் எண்ணங்களை நடை முறைப்படுத்தி, அவனது கனவு களை நனவாக்கியது தமிழீழ விடு தலைப் புலிகள்தான். அவன் நினைத்த வற்றை புலிகள் நிறைவேற்றி யுள்ளார் கள். தன் தாய்நாட்டிற்காக உடல், பொருள், ஆவி முழுவதனையும் தியா கம் செய்த சிவகுமாரன் தமிழர் போராட்ட வரலாற்றில் ஓர் திருப்பு முனையை ஏற்படுத்தினான் என்ப தனை மறைக்கவோ, மறுக்கவோ முடியாத ஓர் உண்மையாகும்.

அவனது கனவுகளை நெஞ்சில் சுமந்து வீரத்துடன் எழுச்சி பெறு வோம்.

– நன்றி: புலிகளின் குரல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தமிழீழ வைப்பகத்தில் ஓர் உலா

## எம்மை அழிக்க எமது சேமிப்புக்கள் பயன்படும் நிலை என்று மாறும்?

**சி.சிவரூபன், த.சத்தியன்**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை திடப்படுத்துவதில் வங்கிகளின் பங்களிப்பு அத்தியாவசியமானதாகும். பணத்தினை ஓர் இடத்தில் தேங்க விடாது; வைப்புக்கள், சேமிப்புக்கள், கடன்கள் ஊக்குவிப்புத் திட்டங்களின் மூலம் பணச்சுழற்சியை தூண்டி நாட்டின் உற்பத்தி; சந்தை நிலைகளை ஆரோக்கியமாகப் பேணுகின்றது.

இந்த வகையில் உலகத்திலேயே தமிழரிற்கான ஒரே ஒரு வங்கியாக தமிழீழ வைப்பகம் 1994.05.23 இல் உதயமானது. போர்க்காலச் சூழ்நிலைகளைக் காரணம் காட்டி தமிழனின் பொருளாதாரத்தை நசுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகச் சிங்கள அரசுகள்; இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள அரச வங்கிகளின் நடவடிக்கைக்கு, பல முட்டுக் கட்டையான விதிமுறைகளையும், நடைமுறைகளையும் கையாண்ட காலகட்டத்தில் இவ் உதயம் தமிழீழ பொருளாதார மாளிகைக்கு ஒளி ஊட்டியது.

படிப்படியாக தனது செயற்பாட்டுக் கதிர்களைப் பரப்பிவரும் தமிழீழ வைப்பகம்; எதித்காலத்தில் நாட்டின் அச்சாணிகளான சிறார்களின் கல்வியையும் தொழிலையும் திடமானதாக அமைக்கும் நோக்கில்; தமது புதுக்குடியிருப்புக் கிளையில் 98.11.02 இல் முதல் முதலாக 'சிறார் உண்டியல்' என்ற சிறப்புத்தேட்டக் கணக்கினை ஆரம்பித்தது.



தற்போது தமது பிரதேசங்களில் வாழும் மக்கள் வருமானம் தளம்பல் நிலையிலும், சீரற்ற நிலையிலும் உள்ளது. சிறார் உண்டியல் சிறப்புத்தேட்டம் பதினெட்டு அகவைக்கு உட்பட்டவர்களுக்குரிய தேட்டமாகும். இத் தேட்டம் சார்பாக மல்லாவியில் இயங்கிவரும் யாழ். கிளையின் மேலாளர் கருத்துத் தெரிவிக்கையில்.....

இத்தேட்டத்தில் பெற்றார்களும் மாணவர்களும் மிக ஆர்வமாக இணைகின்றனர். மேலும் இப்பணம் எமது நாட்டில் கைத்தொழில் செய்ய முற்படுவோரிற்கும் விவசாயம், வர்த்தகம், சுயதொழில், கல்வி போன்றவற்றிற்குப் பயன் படுவதனால் இத்தேட்டம் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு நெம்பு ஆக அமைந்துள்ளது.

பெற்றோர்களிற்கு இது; தமது பிள்ளைகளை இத்தேட்டத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் அவர்களின் வாழ்வை சுபீட்சமாக்கி நாட்டின் பொருண்மிய வளர்ச்சிக்கு உதவும் ஓர் அழைப்பாக உள்ளது.

கிளைமேலாளர் மேலும் தகவல் தருகையில், 18 அகவைக்கு முன் இத்தேட்டத்தில் இருந்து; கல்வி, மருத்துவத் தேவைகளிற்கு அவசியமாயின் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மீளப் பெற்றுக் கொள்ளலாம். என்பதை அறிந்த நாம்; அங்கே பாடசாலை மாணவர்களை தேட்டத்தில் இணைக்க வந்த மல்லாவி மத்திய கல்லூரி ஆசிரியர் திரு.ந.குமரகுருபன் அவர்களை நாடிக் கதைத்தபோது....

முன்னர் வங்கிகளின் பயனை வன்னிப்பிரதேச கிராமங்களில்வாழும் பாமர மக்கள் பெற்றிருக்கவில்லை. இதற்குக் காரணம்; ஒன்று; அரசவங்கிகளின் நிர்வாகக்கரம் இவ்வாறு ஆழமாக நீளவில்லை. இரண்டாவது; கிராம வாழ் பாமர மக்கள் வங்கியியல் சார் அறிவு பெற்றிராமை, என்பனவாகும் இன்று தமிழீழ வைப்பகம் ஆனது "சிறார் உண்டியல்'' என்ற தேட்டக்கணக்கை பாடசாலைகளின்ஊடுநகர்த்தியதின் மூலம் வன்னி வாழ் பாமர மக்களின் வங்கியியல் தொடர்பு அற்ற நிலையை தகர்த்துள்ளது. இது நாட்டின் அபிவிருத்தியின் முதலாவது வெற்றிப்படியாகும்.

முல்லைமாவட்டக் கல்வித் திணைக்களத்தின் வாழ்க்கைத் திறன் பாடத்திட்டத்தினூடு; மாணவர்க்கு கடிதவுறை தயாரித்தல் போன்ற கைவினைத்திறன் பொருள் உற்பத்தியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இத் திட்டத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கும் சிறு வருமானத்தைச் சேமிக்க "சிறார் உண்டியல்'' சிறந்த பொக்கிசம். இக்கூட்டு நடவடிக்கையால் மாணவரிடையே "கற்கும் போதே உழைப்போம் சேமிப்போம்'' என்பது நிதர்சனமாகின்றது.

மாணவர்களிடையே உழைப்பினதும், சேமிப்பினதும் பாத்திரத்தை பூரணமாக அறியும் நிலையை தேட்டம் கொண்டுள்ளதை அறிந்து மகிழ்வுடன் யோகபுரம் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. ரி. எஸ். சாந்தகுமார் அவர்களை அணுகிய போது.....

கற்கும் போதே எதிர்காலத்தில் நம்பிக்கையும், சேமிப்புப் பழக்கமும் மாணவரிடையே உருவாகும். மேலை நாடுகவில் செயல் முறைக்கல்வி; எமது கல்விமுறை அவ்வாறானது அல்ல, எமது கல்வித் திட்டத்தில் மாணவரிற்கு [உயர், சாதாரணதரம்] வங்கியியல் கற்றல் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நடைமுறையில் வங்கிசார் நடவடிக்கைகளை விளங்கிக் கொள்ளச்சந்தர்ப்பம் இல்லை. 'சிறார் உண்டியலில்' 15 அகவைக்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவே தேட்டக்கணக்கு திறக்க கூடியதாக உள்ளதால்; மாணவர்கள் வங்கியியல் நடவடிக்கைகளை அனுபவரீதியாகவும் அறிந்து கொள்ள வாய்ப்பாக உள்ளது.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது வைப்பகம் தமது வைப்புப் பணத்தில் இருந்து எமது பிரதேச விவசாயம், வர்த்தகம், கைத்தொழில்சார் முயற்சியாளராக கடன் உதவி புரிகின்றது. இங்கு பணச் சுழற்சி மூலம் நாடு அபிவிருத்திப் பாதையில் நடைபோடுகின்றது.

அரசாங்கம் தற்போதைய போர்ச்சூழலைக் காரணம்காட்டி அரச வங்கிகளில்; திரளுகின்ற திரவப்பணத்தில் குறித்த தொகையினை சிறீலங்காவில் உள்ள மத்திய செயலகங்களிற்கு அனுப்ப வேண்டும் எனவும் கையிருப்பாக குறித்த தொகைக்கு குறைவான சொற்ப பணத்தையே இங்கு வைத்திருக்க அனுமதியும் வழங்கியுள்ளது. அத்துடன் வங்கி நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் திரவப்பணத்தை தென்பகுதியில் இருந்து இங்கு கொண்டுவருவதில் பல கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது. இதனால் வன்னிப்பகுதியில் உள்ள அரச வங்கியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு வேண்டியளவு திரவப்பணத்தை வழங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

> கேப்பாபுலவு மானாவாரிவயல்
> விளைந்த நெல் விற்றுப் பணம் பெற்ற
> கந்தப்பு, விடிந்ததும் பணப்பையுடன்
> போனார் சிறீலங்கா அரச வங்கிக்கு.
> தண்ணிமுறிப்புக்குளத்தின் கீழ்உள்ள
> மேட்டு, துருசின் [வலதுகரை]
> 4ம்கண்ட 5ஏக்கர் வயல் கந்தப்பரின்
> உரித்துக்காணி. கடந்த வருடங்களின்
> வேளாண்மை இன்றி ஏன் உள்ளது?

இங்கு உள்ள மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால்; இவ்வாறு அரசாங்க வங்கிகளில் எம்மால் வைப்புச் செய்யப்படும் பணத்திலேயே; திறைசேரி மாற்று உண்டியல் மூலம் திறைசேரி கடன் பெற்றுக் கொள்கின்றது. நாட்டின் பாதுகாப்பு செலவு அதிகரிப்பால் ஏற்பட்ட துண்டு விழும் தொகையை நிறைவு செய்யவே இக்கடன் பயன்படுகின்றது. எனவே எமது பணமே எமது தலைமேல் குண்டுகளாக விழுகின்றது.

[தொடர்ச்சி அடுத்த இதழில்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# துரோகச் செயல்களை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது

## தமிழ் துரோகக்குழுக்களின் அங்கத்தவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அழைப்பு

எமது அரசியல் வரலாற்றிலேயே மிகவும் இக்கட்டானதும், மிகவும் நெருக்கடியானதுமான காலகட்டத்தில் எம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனவெறி பிடித்த சிங்கள இராணுவம் எமது தாய்மண்ணை ஆக்கிரமித்து, முற்றுகையிட்டு, எம் மக்கள் மீது தாங்கொணாக் கொடுமைகளை விளைவித்து வருகின்றது. மிகவும் கொடுங்கோன்மையான இராணுவ சர்வாதிகார ஆட்சி எம்மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. எமது சொந்த மண்ணிலேயே எம்மக்கள் அடிமைகளாகவும், சிறைக்கைதிகளாகவும் அல்லற்படுகின்றார்கள். உயிரழிவும் பொருளழிவுமாக, இரத்தமும், கண்ணீருமாக, பசியும் பட்டினியுமாக, பயமும் பதட்டமுமாக எம் மக்களது வாழ்க்கை நாசமாக்கப்பட்டுள்ளது.

இப்படியான மனித அவலத்தைத் தடுப்பதற்காகவும், எமது மக்களின் சுதந்திரத்திற்காகவும், தன்மானத்திற்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி போராடிவருகின்றார்கள். எமது இலட்சியப் பயணமும், அதற்காக நாம் புரிந்து வரும் உன்னத தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும் உங்களுக்குப் புரியும்.



சிறீலங்காவின் தேசிய துணைப்படையில் இயங்கி பெரும் காட்டிக்கொடுப்பில் ஈடுபட்ட ராசிக்

வரலாற்று நிகழ்வுகள், திருப்புமுனைகள், அரசியல் நெருக்கடிகள், யுத்த நடவடிக்கைகள், இராணுவ அழுத்தங்கள், அரச பயங்கரவாதச் செயல்கள், காட்டிக்கொடுப்புக்கள் என பல நெருப்பாறுகளைக் கடந்து எமது இயக்கம் வெற்றி நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அத்துடன் எமது விடுதலை இயக்கம் புரட்சிகர வடிவமாக ஆயுதப் போராட்டத்தினை அறிமுகப்படுத்தி அந்த ஆயுதப் போராட்டத்தினை ஓர் தேசிய விடுதலைப் போராட்டமாக விரிவுபடுத்தி அந்த விடுதலைப் போரைச் சிறப்பான முறையில் திட்டமிட்டு, நெறிப்படுத்தி, போராட்டத்தில் ஒப்பற்ற சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. இவ்வரிய சாதனைகள் மூலமாக தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் முதன்மைப் படுத்தி உலகம் வியக்கும் ஓர் பெரும் போரை எமது விடுதலை இயக்கம் நிகழ்த்தி வருகின்றது.

கெரில்லா இயக்கமாக ஆரம்பித்து இன்று ஓர் மரபு வழி படையணியாக எமது இயக்கம் பெருவளர்ச்சி பெற்றுள்ளது. கடற்படை, தரைப்படை, விமானப் படைகளுடன் ஆட்டிலறி, பீரங்கிப்படையணிகளும், கவசவாகன எதிர்ப்புப் படையணிகளும் உருவாக்கப்பட்டு எமது போராட்டம் பெருவேகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் என்றுமில்லாதவாறு முழு இராணுவ பலத்தையும் திரட்டி சந்திரிகா அரசாங்கம் மேற்கொண்ட ஜெயசிக்குறு நடவடிக்கையினையே முறியடித்துப் புலிகள் தமது இராணுவ பலத்தை உலக அரங்கில் நிரூபித்துள்ளார்கள்.

கொண்ட கொள்கையில் தெளிவும், தளராத இலட்சிய உறுதியும், தீர்க்கதரிசனமான பார்வையும், முற்போக் கான சமூகவியல் கண்ணோட்டமும், ஆழமான மக்கள் நேயமும் கொண்ட எமது பலம் மிக்க அமைப்பை அழித்துவிட நீங்கள் எதிரியுடன் இணைந்து நிற்பது மிகுந்த கவலைக்குரியதும், வேதனைக்குரியதுமான ஒன்றாகும். தேசிய சுதந்திரத்திற்காக நாம் வரித்துக்கொண்ட புரட்சிகர ஆயுதப் போர்ராட்டத்தின் வரலாற்றுக் கட்டாயத்தையும், அதன் அரசியல் முக்கியத்துவத்தயையும் புரிந்துகொள்ளாமல் துரோகச் செயல்களிலும், மக்கள் விரோதச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது என்றுமே மன்னிக்கமுடியாத ஒன்றாகும்.

எமது விடுதலை அமைப்பை அழித்து விடுவது என்று கங்கணம் கட்டியவாறு எமது தாய் மண்ணை ஆக்கிரமித்த உலகின் நான்காவது பெரிய வல்லரசின் இராணுவமே எம்மை அழிக்கமுடியாமல்-தான் அழிந்ததைத் தவிர- அவமானத்துடன் இந்தியாவிற்கே திரும்பிச் சென்றது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இதே போல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாசா, டிங்கிரி பண்டா விஜதுங்கா ஆகியோர் எம்மை அழிக்கக் காலக்கெடுக்களை விதித்து யுத்தம் நடாத்தித் தோற்றுப்போனமையும் உங்களுக்குத் தெரியும். அத்துடன் எமக்கும் எமது மக்களுக்கும் துரோகமிழைத்தவர்கள் தப்பியது கிடையாது. அவர்கள் அழிந்து போன நிகழ்வுகளே வரலாறாக உள்ளது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தனியாகத் தமிழ் இனத்திற்கு மட்டுமல்லாமல், உங்களது சொந்தக் குடும்பத்திற்கும், உங்களது குடும்ப உறவுகளுக்கும் சேர்த்தே துரோகமிழைக்கிறீர்கள். ஒட்டுமொத்தமான தமிழ் இனமே பாதிக்கப்படும் போது அதன் ஓர் அங்கமாக உள்ள உங்கள் சொந்தக் குடும்பங்களும்தான் பாதிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

அத்துடன், உங்களது அறியாமையினாலோ அல்லது வறுமையின் நிமிர்த்தமாகவோ நீங்கள் சுயநலத் துரோகக் கும்பல்களின் தலைமைக்கு அடிமைச் சேவகம் செய்கின்றீர்கள். துரோகக் கும்பல்களின் தலைவர்கள் தாமும், தமது குடும்பமும் இன்பமாகவும், உல்லாசமாகவும், ஆடம்பரமாகவும் வாழ்வதற்காக உங்களது உயிருக்கே மிகவும் ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபட உங்களை தூண்டிவிட்டுள்ளார்கள். சூது வாதறியாத அப்பாவி இளைஞர்களாகிய நீங்கள் சுயநலத் துரோகக் கும்பல்களின் தலைமைகளின் செயற்பாடுகளுக்குத் துணைநின்று பலியாவதுதான் எமக்கு மிகுந்த வேதனையையும் சங்கடத்தையும் ஏற்படுத்துகின்றது.

தேசத்துரோக நடவடிக்கைகளிலீடுபடும் நீங்கள் எங்குமே தப்பிவாழ முடியாது. காற்றுப்புகக்கூடிய இடமெங்கும் விடுதலைப் புலிகள் வருவார்கள். எதிரியின் பாதுகாப்புக் கோட்டைகூட உங்களுக்குப் பாதுகாப்பானதல்ல. 1996இல் முல்லைத்தீவு இராணுவத்தளமும், 1998 இல் கிளிநொச்சி இராணுவத்தளமும் புலிகளால் முற்றாகத் துவம்சம் செய்யப்பட்டன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அத்துடன், அத்தளங்களில் இருந்த ஒரு இராணுவச் சிப்பாயைக் கூடத் தப்பிச்செல்ல புலிகள் விடவில்லை. எத்தனை பேர் அங்கு இருந்தார்களோ அத்தனை பேருமே புலிகளால் கொல்லப்பட்டார்கள். எனவே, எந்த இராணுவ முகாமில் நீங்கள் இருந்தாலும் உங்களது உயிருக்கு உத்தரவாதம் இருக்காது.

ஆகவே விடுதலைப்புலிகளின் பலத்தைப் புரிந்துகொண்டு, தேசத்துரோகத் தலைவர்களின் போலியான, அழிவுப் பாதைக்கே இட்டுச்செல்லும் தவறான வழிநடத்தலிற்குத் துணை போவதை நிறுத்துங்கள். வெல்ல முடியாத ஒரு செயற்பாட்டிற்கு போலித்தனமான நம்பிக்கையுடன் உங்களை நீங்களே அழித்துக் கொள்வதை நிறுத்துங்கள். துரோகிகளாக அழிவதால் உங்களுக்கு யாது பயனும் கிடைக்கப்போவதில்லை. எனவே, உங்கள் தவறுகளை உணர்ந்து மக்கள் விரோதச் செயற்பாடுகளைக் கைவிட்டு பொதுவாழ்வில் இணைந்துகொள்ளுங்கள். நீங்கள் பொதுவாழ்வில் இணைவதை நாம் மனப்பூர்வமாக அனுமதிப்பதுடன், இதுவரை காலமும் நீங்கள் செய்த தவறுகளையும் நாம் மன்னித்து விடுவோம். பொதுவாழ்வில் இணைந்து உங்கள் குடும்பங்களைப் பராமரிப்பது எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் செய்யும் பெரும் உதவியாக அமையும்.

அத்துடன், எமது அமைப்புடன் இணைந்து போராட விரும்புபவர்களையும் நாம் எமது போராட்டத்தில் உள்வாங்கிக்கொள்ள மிகுந்த ஆவலுடன் இருக்கின்றோம். எனவே எமது பொது எதிரிக்கு எதிராக நாம் ஒன்று திரண்டு போராடுவோம். களத்தில் எதிரியைச் சந்திக்கும்போது எம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் பிறக்கும். அதேசமயம் உண்மையான ஒருமைப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம். நாம் தோளோடு தோள்நின்று போராடும் போது எமது மக்களும் எம்மோடு அணிதிரள்வார்கள். முழுத்தேசமுமே எமக்குப் பலமாக நிற்கும்.

மேலும், தமிழ் மக்களுடைய வரலாற்றுக் காலப்பகுதியிலேயே உண்மையான இலட்சிய உறுதிகொண்ட, அந்நிய சக்திகளுக்கு அடிபணிந்து அடிமைகளாக வாழ்ந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பித் தமிழனைத் தலைநிமிரவைத்த மாபெரும் தலைவன் எமக்குக் கிடைத்துள்ளார். தமிழினத்தின் விடுதலை வேட்கையைச் சுதந்திரத்திற்கான விடுதலைப் போரைத் தலைமைதாங்கி வழிநடாத்திச் செல்ல உலகத் தமிழினமே போற்றி நிற்கும் ஒரு அற்புதமான தலைவனை எமது வரலாற்றுக்காலத்திலேயே பெற்றிருக்கின்றோம். எங்கள் தலைவர் உங்களைத் தன்னுடைய சகோதரர்களாக, தன்னுடைய இனத்தின் ஓர் பெறுமதிமிக்க ஒரு உயிராகக் கருதி, நீங்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதென்றாலோ அல்லது போராட்டத்தில் இணைந்து போராட விரும்பினாலோ உங்களை அன்புடன் வரவேற்கக் காத்துநிற்கின்றார்.

அத்துடன் எமது தேசத்தின் விடுதலைக்காகவும், எமது இலட்சியம் வெற்றி பெறுவதற்காகவும் இதுவரை காலமும் தமது இன்னுயிரை ஈர்ந்த 13,659 மாவீரர்களுடைய அளப்பரிய தியாகங்கள் ஒருபோதும் வீண் போகக்கூடாது. இதே போன்று தமது இரத்தத்தையும், வியர்வையும் சிந்தியவாறு போர்க்களத்தில் சமராடும் போராளிகளுடைய சாதனைகளும், தியாகங்களும் ஒருபோதுமே வீண் போகக்கூடாது. இதேபோன்று எமது தேசத்தின் விடுதலைக்காக எமது மக்கள் படும் சொல்லொனாத் துயரங்களுக்கும், வேதனைகளுக்கும் நாம் நிச்சயம் முற்றுப்புள்ளி வைத்தே ஆகவேண்டும். எனவே எல்லோருடைய தியாகங்களும் வீண் போகாதவாறு நீங்களும் இந்தப் போராட்டத்திற்கு கட்டாயம் பங்களித்தேயாக வேண்டும்.

ஆனால், இச்சந்தர்ப்பத்தைத் தவற விடுவீர்களேயானால் வரலாறு உங்களை மன்னிக்காது என்பதை மறந்து விடாதீர்கள். தனது சுயநலத்திற்காக வீணாகப் பல இளைஞர்களைப் பலிக்கடாவாக்கிய தேசத்துரோகி ராசிக்கிற்கு என்ன நடந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே, முடிவு உங்கள் கைகளில்தான் உள்ளது. துரோகச் செயல்களைக் கைவிட்டு மானத்துடன் தமிழனாக வாழப் போகின்றீர்களா? அல்லது மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு அநியாயமாக உங்களை நீங்களே அழித்துக்கொள்ள போகின்றீர்களா? என்பதை நீங்களே முடிவெடுத்துக்கொள்ளுங்கள்.



வவுனியாவில் அரசிற்குத் துணைப்படையாக செயற்படும் புளொட் மாணிக்கதாசன்

-புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூடு திரும்பும் மகிழ்வில் ஒரு குருவி



**சென்ற இதழ் தொடர்ச்சி**

தூபியில் 'கைவிடப்பட்ட நிலையினரின் பாதுகாவலனே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்' என்ற வரிகள் பொறிக்கப்பட்டிருந்ததை நீண்ட நாட்களாய் காற்று மட்டுமே வாசித்தது. இனிமேல் தான் மனிதர்கள் அதனை அர்த்தப்படுத்தி அந்த நிலத்தில் நடைபயில வேண்டியவர்களாகின்றார்கள் என்ற உணர்வு தட்டியது.

சேவியர் கடைச்சந்தி. ஜெயந்தி நகருக்குப் போகும் பாதையே தெரியாது புற்கள் அடர்ந்து கிடந்தன. நடுவே இரண்டு மரங்களும் எழுந்து கிளைவிரித்திருந்தன. தெருவின் வலப்புறமாயிருந்த சேவியர் தேநீர்க்கடை கூரைகள் இழந்து அதன் முன் அடுக்கப்பட்டிருந்த 'கொங்கிறீற்' கற்களில் அமர்ந்திருந்த பேரராளியொருவன் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தான். எம்மை நிமிர்ந்து பார்த்து முகத்தை மலர்த்திவிட்டு தன் பணியில் விழிகளைச் செலுத்தினான்.


சைக்கிள் சேவியர் கடைச்சந்தி தாண்டி கனகபுரத்து வீதியை ஊடறுத்த படி விரைந்தது. வீதியால் புல்டோசர் விரைந்த சுவடுகள். மாவட்டச் செயலகம் சிதைவுற்றுத் தெரிந்தது. அதன் மரங்களில் முன்னைய காலங்களில் தாவித் திரிந்த குரங்குகளை காணவில்லை. வெடிகளின் அதிர்வில் அஞ்சி தொலை தூரம் போயிருக்கலாம். இனிமேல் வசந்த காலத்தைப் பாடும் குயில்களும் புள்ளினங்களுமே அதில் சிறகசைத்து குரலெழுப்பித்திரியும். சற்றுத் தள்ளி தரையில் இராணுவத் தொப்பிகள் இரண்டும் மேலாடையொன்றும் கிடந்தது. காற்றில் பிணவாடை கலந்து நாசியில் உதைத்தது. மன வெம்மை தணிந்த மாதிரியிருந்தது. கனகபுர விளையாட்டரங்கின் உதைபந்தாட்டக் கம்பங்களிலும் இராணுவத்தினின் தொப்பிகள் கொளுவப்பட்டிருந்தன. நாம் விளையாடிய மைதானம் இரண்டு ஆண்டுகளாய் இராணுவம் மிதித்துத் திரிந்த பூமியாயிருந்தது இதில் எத்தனை துயரத்துக்கான விதைகளை ஊன்றியிருப்பான். அநாதரவாய் மேய்ந்த மாடுகளை துப்பாக்கிகளால் துரத்தியிருப்பான். இனிமேல் மீண்டும் எம் வீரர்களின் கால்கள் பந்தை இங்கே உதைக்கும். படைகளுக்கு நிகழ்ந்ததைப்போல, மீண்டும் போட்டிகள் குதூகலத்தின் வெளிப்பாடாய் மைதானத்தில் இறங்கும்.

கிளிநொச்சி 'டிப்போ' வீதியில் ஏறியதுமே மனதில் திகில் பரவியது. எதிர்பாராத விதமாய் அண்மையில் குமரபுரம் பூசாரி அப்புவை பாடையிலேற்றிக் கொண்டு போன போது கண்ட சுடலையின் ஞாபகம் நெஞ்சுள் கிளர்ந்தது. வீதியின் இரு புறமும் இருந்த இராணுவத்தின் காவலரண்கள் புல்டோசரால் இடித்து நொருக்கி வேலியோரமாய் ஒதுக்கப்பட்டிருந்தன. அதனுள் எத்தனை மிதிவெடிகள் இருந்து வெடித்திருக்கும் என எண்ணிக் கொண்டேன் மிதி வெடியென்றதுமே பாதம் சிதறி இலைகுழைகள் ஒட்டிக் கிடக்க துணியால் சுற்றிக்கட்டி குருதி சொட்ட ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த இளைஞனின் நிலை பேயாட்டம் காட்டியது. சைக்கிள் 'கான்றிலை' இறுக்கப் பற்றிக் கொண்டேன். தப்பித் தவறி வீதியை விட்டிறங்கி விடக்கூடாதென்ற அச்சுறுத்தலில்.

எந்த இடமென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத் தோன்றவில்லை. நீளத்துக்கு செங்கோணத்தில் கட்டப்பட்டிருந்த 'சென்றிப் பொயின்ரு'களும் மண் அணைகளும் பூதங்களின் மனையெனக் கிடந்தன. சாக்குகளால் இறுக அடைக்கப்பட்டிருந்த அரண்கள் வீதி ஓரமாக நீளத்தக்கு கொங்கிறீற் கற்க

**ப. தயாளன்**

ளால் எழுப்பப்பட்டிருந்த் ஒரு அடிவரை உயரமான சுவர். மேலே ஒற்றை ஓடுகள் நீளத்துக்கு அடுக்கப்பட்டிருந்தன. வானவில்லெனப் பல நிறங்களில் சேலைகளும் பிற உடைகளுமாய் வாசலில் தொங்க உடுபுடவைகள் நிறைந்து வழிந்த அங்காடிக்கட்டிடங்கள் பல மூளியாய், கரி படர்ந்து கிடந்தன. நொருங்கியும் கம்பிகளில் தொங்கியபடியும் இருந்த கொங்கிறீற்கள் ....அந்த இடத்தில் பெரும் சோழகக் காற்று வீசுமானால் ஓவென அறைல் ஒலியெழுப்பும் திகில் நிறைந்த பிரதேசமாய் எனக்குத் தோன்றிற்று அன்று மாலை. இராணுவத்தின் கட்டளைத் தலைமையகம் இருந்த இடத்திற்கு முன்பாக சில நாட்கள் முன்வரை வாளேந்திய சிங்கம் பறந்து கொண்டிருந்ததாம். அந்த இடத்தில் புலிக்கொடி ஏற்றப்படுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டி





ருந்தன. இதனைக் காண மக்கள் லொறிகளிலும் சைக்கிள்களிலும் புன்னகை நிரம்பிய முகங்களோடு விரைந்து கொண்டிருந்தனர். மேலேயும் உள்ளேயுமாய் சனங்கள் நெருங்கியிருக்க லொறியொன்று வேகமாய் வந்தது. வீதியைக் குறுக்கறுத்து மேலே ஓடியிருந்த மின்கம்பியொன்று சடுதியாய் லொறி கீழே நகரும்போது அறுந்து ஒருவனின் கழுத்ததைச் சுற்றி இழுத்தது, அவன் இழுபட்டுக் கீழே விழ எத்தனிக்க பின்தட்டில் நின்றருந்த ஒருவன் அவனது சாறத்தைப் பிடித்தான். விழுந்தவன் அந்தரத்தில் தொங்க லொறியில் அபாயக் கூச்சல் மிதந்தன. இன்னொருவன் அவனது கையை மேலிருந்து எட்டிப்பிடித்திழுக்க திகில் நிரம்பிய முகத்தோடு அவன் அவசரமாய் உன்னிமேலே தாவினான். அனுமினியக் கம்பி அவன் கழுத்தை வெட்டியிருந்தது. குருதி கசிந்தது. இதைக் கண்ட எண்ணுள் அச்சம் மேவியது. மீட்கப்பட்ட பிரதேசம் எனினும் பெரும் பயங்கரம் நிறைந்திருப்பதாய் தோன்றிற்று.

பெரும் மகிழ்வு ஆர்ப்பரிக்க வந்த எனக்கு மீட்கப்பட்ட அந்த நகரத்தின் அமைதியும் அலங்கோலமும் அங்கு முன்பு குடிகொண்டிருந்தபேய்களின் குரூரங்களைக் காட்டிற்று. மீள முடியாத திகைப்பிற்குள் விழுந்திருந்தேன். இனி எப்போது இங்கே ஜீவனோபாயத்தை நிலை நிறுத்தும் இயக்கம் தொடங்கும் என்னும் ஏக்கம் என்னையறியாமலே எழுந்தது. திரும்பும் இடம் எல்லாம் கண்களுக்குத் தெரிந்த மண்சாக்குகளும் மண் அணைகளும் எல்லாமே சிதறுண்டு போன ஒரு நாகரிகத்தின் சிதைவுகளாய்த் தோன்றிற்று.

இத்தனையும் அரங்கேறிய மண் இப்போது எங்களிடம். இந்த நினைவு பெரிய தொரு எழுச்சியை மனதுள் தந்தது. நாட்கள் சற்று அதிகமாய்ப் போனாலும் சுடுகாட்டை நகராக்க இயலும் எனும் நம்பிக்கை பூத்தது. ஏனெனில் அழகுகள் வேரூன்றி கிளைவிரிப்பதற்கான வளமானதரை இப்போது எமதாச்சுது. சேற்றில் ஓடும் நாற்றுக்களின் வேரினால் வலிமை பெற்ற நகரமிது. மீளவும் நெல் நாற்றுக்கள் மிதி வெடிகளால் நிறைந்துள்ள வயலில் அசைகையில் உரம் பெற்று ஒளிரும் இந்தப் பூமி, இந்த நம்பிக்கையே எழுந்து கம்பத்தின் உச்சியைத் தொட்டுப்பறக்கும் புலிக்கொடியோடு விரிந்து நாளைய இருப்பை அர்த்தப்படுத்துவதாய் தோன்றுகின்றது. உண்மையும் அதுவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புகலிடத் தமிழர்கள்

## — பங்களித்தல் - பங்களிக்கத் தூண்

ஐரோப்பிய - அமெரிக்க - அவுஸ்திரேலிய கண்டங்களில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் உணர்வுகளில் கலந்து, உயிரை உலுப்பும் வினா, "எப்போது நாம் துள்ளி விளையாடிய பூமியில் ஆற அமர இருந்து குதூகலிப்போம்" என்பதாகும். புகலிட நாடுகளின் சமூக - பொருளாதார-பண்பாட்டு - அரசியல் இயந்திரத் தனத்தினுள் சிக்குண்டுள்ள தமிழர்களின் அவா சொந்த மண்ணின் விடுதலையை பிரார்த்திக்கின்றது. ஆனால் பிரார்த்தனை தனித்து விடுதலையைத் தராது. விடுதலை பெறவேண்டுமாயின் அதற்காக உழைக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி.

புகலிடத்தமிழர்கள் இவ் உயரிய தேவையான விடுதலைக்கு தீவிரமாக உழைக்கவேண்டிய வரலாற்றுக் கால கட்டத்தில் வாழ்கின்றனர். இவ் உழைப்பு இன்றைய கால கட்டத்தில் விடுதலைப் போரில் முக்கிய பங்கை வகிக்கின்றது. அதாவது வெற்றி பெறுவதற்கான போரின் பங்காளிகளாக நின்று உழைத்து போரை வெல்ல வேண்டிய வரலாற்றுப் பாத்திரத்தை புகலிடத் தமிழர்கள் பெற்றுள்ளனர்.








எழுச்சிப் பேரணிகள் - நிதிக்கையளிப்புக்கள் என்பன புகலிடத்தமிழ் தேசியத்தின் குறியீடுகளாகி உள்ளன

## சிங்களத்தின் போர்ப்பொருளாதார வளமும் தமிழீழமும்

1993ம் ஆண்டு சிறீலங்காவின் இராணுவ நிதி ஒதுக்கீடு 20.78 பில்லியன் ரூபாய்களாகும். இது 1994-ல் 26.44 பில்லியன்களக அதிகரிக்கப்பட்டது. 1995-ல் 43.14 பில்லியனாக சிங்களம், இராணுவத்திற்கான உத்தியோகபூர்வ நிதி ஒதுக்கீடாகப் பயன்படுத்தியது. 1996-ல் 43.93 ஆகவும் 1997-ல் 41.52 ஆகவும் 1998-ல் 56 பில்லியனாகவும் இது உயர்வடைந்தது. இதனைத்தவிர பல்வேறு உத்தியோகபூர்வமற்ற மாற்றுவழிகள் ஊடாக தமது தேசத்தைச் சிங்களம் உயிர்ப்பூட்டியது. சுடுகல ஆற்றலை வளர்த்தது. நவீன விமானங்களும், யுத்த டாங்கிகளும், பீரங்கிப்படகுகளும், கொள்வனவு செய்யப்பட்டன.

இப்பாரிய இராணுவ இயந்திரத்திற்கு எதிரான தமிழர்களின் போர் நடவடிக்கையானது பாரிய நிதிப்பலத் தேவையை கொண்டது. தரை - கடல் சமர்களில் எதிரிக்கு ஈடு கொடுக்கக் கூடிய அடிப்படை சுடுகல வசதிகளை எமது விடுதலை அணிகள் பெற்றே ஆக வேண்டிய கட்டாய சூழ்நிலை நிலவுகின்றது. தமது உயரிய அர்ப்பணிப்புக்கள் மூலம் எதிரி முகாம்களை அழித்து கைப்பற்றிய ஆயுதத் தளபாடங்கள் தமிழர்களின் ஆயுத தளபாட தேவைகளின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யினும் இன்றைய சம நிலையை உடைத்து வெற்றி பெற விடுதலைப் போராளிகளின் கரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்!

## தாயகத்தை காதல் செய்

*தொப்புள் கொடியுறவு*
*எல்லாம் பொய்யாகி இல்லாததொன்றாகி*
*பல்தேச மெங்கும் பறந்து சிதறினவா?*
*என்றாலும் நாங்கள் 'இருப்பை- இழக்கவில்லை!*
*தென்னை இளநீரும் செவ்வலரி சிறுபூவும்*
*கண்மலர்த்தி, வேம்பு காய்பழமும் தருகிறது.*
*கத்தரியும் வெண்டிக்கன்றும் பூக்கிறது.*
*சட்டிக்கரணை தழைக்கிறது.*
*இந்த மண் அழகோடு இன்றும் தான் இருக்கிறது:*
*எந்தத்துயர் வரினும் இனிக்கலக்கம் கொள்ளாது!*
*ஆழக்கிணறு, ஆடுகால் பூவரசு,*
*நீளக்கிடக்கின்ற நெல்வயல்கள்*
*உள்ளமட்டும்*
*காலில் விழுந்து எவர்க்கும் கைகட்டி நிற்காது!*
*நேற்றென் பேரன் நேர் வந்தான்;*
*எனைக்கட்டிக்*
*காற்றில் மிதந்தான், களித்தான், முத்தமிட்டான்*
*வரம்பில் இருந்தான், வாய்க்காலின் தண்ணீரை*
*விரும்பிக் குடித்தான், வெளிக்கிட்டான்.*
*'எங்கையடா போகின்றாய்-*
*என்றேன்.*
*அவன் நின்றான்:*
*சண்டைக்கு- என்று சத்தமிட்டுச் சொல்லி விட்டு சென்றான்!*
*இனியெங்கள் தேசம் பணியாது.*
*தாய் மண்ணைக் காதலிக்கும் தளிர்கள் இருக்குமட்டும்*
*பாய்விரித்தெம் தேசம் படுக்காது:*
*போர் செய்யும்.*

*-புதுவை இரத்தினதுரை*
*'நினைவழியா நாட்கள்'*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ன் தேசிய சேவை.

## தல் - வெற்றிக்காக உழைத்தல்

## தேவைப்படுவதைக் கொடு

## தேவை வான் வரை உள்ளது!

**பங்களிப்பு என்பது என்ன?**

உங்கள் பங்கை அளித்தல்
உனக்குரியதைச் செய்தல்
இது நீ சுமக்க வேண்டியது
உங்கள் கடமை!
உங்களுக்கான சந்தர்ப்பம்!
காலம் காலமாய் உரிமை இழந்து - பயந்து வாழ்ந்த உனது மக்கள் நிமிர்ந்து வாழ உழைப்பதற்கான சந்தர்ப்பம்!
முழு ஈழத்தமிழர்களினதும் விடுதலைக்கான - அரசு அமைப்பதற்கான - போராட்டம் உயரிய உயிர் அர்ப்பணிப்புகளுடன் இடம் பெறுகையில் பங்களிக்க வேண்டியது கடமை!

**பங்களிப்பின் பலன் என்ன?**

விடுதலை!
குதூகலமான வாழ்வு!
நம்பிக்கையான எதிர்காலம்!

உலகம் பூராவும் பரவி, வேர் அறுபட்டு, முரண்பாடுகளுடன் வாழும் எமக்கு ஒரு நாடு வேண்டும்
அந் நாட்டில் எமது வாழ்வு - எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும்
எமது பண்பாடு - மொழி - அறிவியல் மேம்பட வேண்டும்
விசாவுக்கும் - வீட்டுக்கும் - கூலித் தொழிலுக்கும் - முரண்பட்ட பண்பாட்டு அழுத்தங்களுக்கும் முடிவு கட்டி எமது முற்றத்தில் கால் விரித்து உட்கார்ந்து எப்போது தமிழர்கள் விண்வெளிக்கு செல்வார்கள் என்பது பற்றி விவாதிக்கவேண்டும் எமது நாடுதான் எமது வாழ்வு

**பங்களிக்காதுவிடின் ஏது நிகழும்?**

மூடர்கள்!
பாதகர்கள்!
மனச்சாட்சியை விற்றுவிட்ட கொடியவர்கள்!

வரலாறு உங்களை இப்படி வர்ணிக்கும்
புகலிட நாடுகளின் முரண்பாட்டுடன் போராடி களைத்து திரும்பி உங்கள் தாயக வேர்களை பார்க்க முற்படின் தாயகம் உங்களைக் காறித்துப்புவதாய் உணர்வீர்கள்
புகலிட நாட்டில் உதைத்து விரட்டப்படின், உங்கள் உறவுகளின் உயிர் அர்ப்பணிப்பில் உதித்த தேசத்தை நீங்கள் நினைப்பீர்கள். மேற்கத்தைய பண்பாட்டு முரண்பாட்டில் - பொருளாதார இயந்திரத் தனத்தில் உங்களை நீங்கள் இழந்து தவிக்கும் போது தாயகம் தரும் சுகம் உங்கள் மனதில் பரவி நிற்கும்

**எவ்வளவு பங்களிக்கலாம்?**

எல்லையற்றது!
ஏனெனில் தேவை வான்(புலிகள்)வரை பரவி நிற்கின்றது
ஒரு மாத ஊதியத்தைக் கொடு!
ஒவ்வொரு பேரணியிலும் பங்கெடுத்துக் கொள்!
தேவையென வரும் போது பக்கத்து வீட்டில் கடன் வாங்கிக்கொடு!

ஒன்றை மறந்து விட வேண்டாம்
நீங்கள் விடுதலை பெற பங்களிக்கின்றீர்கள்
உங்கள் அரசு அமைந்து - உங்கள் வாழ்வு வளம்பெற பங்களிக்கின்றீர்கள்
உயிர் கொடுக்கும் போராளியின் கரங்களைப் பிடித்து நடக்கின்றீர்கள்
நீங்கள் வழங்கும் ஒவ்வொரு பங்களிப்பும், உங்களை விடுதலையாகும் நாட்டின் உரிமையாளர் ஆக்குகின்றது

விடுதலை வேண்டுமாயின் கொடு!
கேட்பதைக் கொடு!
தேவைப்பட்டதைக் கொடு!

நாடு உன்னைப் பாதுகாக்கும் -
நாடு உனக்கு வாழ்வு தரும் -
நாடு உன் குழந்தைக்கு குதூகலம் தரும் -
நாடு உன் பேரக் குழந்தையை விண்வெளிக்கு அனுப்பும்

**பங்களிக்காதவரைப் பார்த்தால் என்ன சொல்வாய்?**

பங்களிக்கச் சொல்!
நீ பங்களித்தால் நிலத்தை மீட்கலாம் எனச் சொல்!
நீ பங்களித்தால் விடுதலை இன்றே பெறலாம் எனச்சொல்!
எதிரி செய்யும் கொடுமைகளை அனுமதிப்பதா எனக்கேள்
பட்டினிக்கும் - சாவுக்கும் பதில் சொல்லச் சொல்லு
சந்திரிகாவின் போர்ச் செலவைச் சொல்லு
எமது தலைவனின் போர்ச் செலவை ஏற்கச் சொல்லு!
கேட்பதைக் கொடுத்து
தேவைப்பட்டதைக் கொடுத்து
வரலாற்றில் தன்னை மனிதன் எனப் பதியச் சொல்லு
தீர்ப்பு நாளுக்காக காத்திருக்கவேண்டாம்
இன்றே இப்போதே பங்களித்து
அந்தக் கரைகளில் சுகமாக ஆழமூச்சிழுத்து விட தயாராகச் சொல்லு

**பங்களிக்கிறேன்! பங்களிக்கிறேன் ஆனால் என் பாத்திரம் என்ன ? நான் யார்?**

நீ பங்காளி!
விடுதலைப் போரில் பங்கேற்றவன்!
பிரபாகரன் தலைமுறையின் நெருப்பு!
உழைப்பைக் கொடுத்து படைப்பலத்தைக் கொடுக்கின்றாய்!
உழைப்பைக் கொடுத்து மண்ணை மீட்கின்றாய்!
உழைப்பைக் கொடுத்து எம் மக்களின், போராளிகளின் உயரிய உயிரிழப்பைக் குறைக்கின்றாய்!

எப்படி?

நீ உன் பணிசெய்
உன் பணி எம் போராளிகளைப் பலப்படுத்தும்
பலம் வாய்ந்தவன் வெற்றி பெறுவான்.
கரும்புலிகள் சகாப்தம் படைத்த வரலாற்றை உங்கள் உழைப்பு வெற்றிக்கு இட்டுச் செல்லும்
வெற்றி உயிரிழப்பைத் தவிர்க்கும்
வெற்றி உயிர்களைப் பாதுகாக்கும்

நீ பங்களிக்க மறுப்பின்
கரும்புலி பிறப்பான் - வரலாறு படைப்பான்
ஆனால் நீ
வாழ்வின் அர்த்தம் இழந்து
வாய்த்த சந்தர்ப்பம் மறந்து
கடமை மறந்து
உன்னை இழந்துவிடுவாய்!
உன் குழந்தை - பேரக்குழந்தை
உன்னைக் கேள்விகளால்
தூக்கிலிடும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






28.05.99 அன்று பரந்தன் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

**வீரவேங்கை நிரோஜன் அல்லது கார்வண்ணன்**
**கோபாலகிருஸ்ணன் கிரிதரன்**
**45, செல்வபுரம் வடக்கு வவுனிக்குளம்**

**வீரவேங்கை கரும்பரசன் அல்லது குயிலரசன்**
**விஸ்வலிங்கம் பார்வலிங்கம்**
**மன்னார்**

11.06.99 அன்று பரந்தன் பகுதியில் இருந்து பூநகரியைக் கைப்பற்றுவதற்கு முன்னேற முயன்ற சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் 8 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

**கப்டன் இனியவள்,**
**2ம் லெப்டினன் அம்குஸா,**
**வீரவேங்கை நாவினி,**
**வீரவேங்கை செந்மதி,**
**வீரவேங்கை கமலா,**
**வீரவேங்கை வேங்கையரசி,**
**வீரவேங்கை கண்ணன்**
**வீரவேங்கை மெய்யப்பன்**

11.06.99 அன்று பரந்தன் சுட்டதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை அறிவுக்கரசி**
**தேவையான் றொசாந்நி**
**யாழ் மாவட்டம்**
**த.மு. 3ம் யூனிட் யோகபுரம் மல்லாவி**

10.06.99 அன்று சுதந்திரபுரம் பகுதியில் சிறீலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் நாட்டுப் பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**நாட்டுப்பற்றாளர் சிதப்பரப்பிள்ளை குமாரவேல்**
**யாழ் மாவட்டம்**
**த.மு. றெட்பானா விசுவமடு**

13.06.99 அன்று மன்னார் திராட்டிக்குளம் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை சிவகீர்த்தி**
**மயில்வாகனம் அருளானந்தம்**
**மட்டக்களப்பு**

**வீரவேங்கை குலவேந்தன்**
**வல்லிபுரம் புஸ்பராசா**
**மட்டக்களப்பு**

**வீரவேங்கை சுதந்திரன்**
**கணேசமூர்த்தி பாலச்சந்திரன்**
**மட்டக்களப்பு**

13.06.99 அன்று பரந்தன் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**வீரவேங்கை அழகரசன்**
**குமாரசாமி குமார்**
**கண்டி மாவட்டம்**

13.06.99 அன்று பெரியமடுப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**வீரவேங்கை தவராஜ்**
**தங்கரத்தினம் யோகராஜா**
**மட்டக்களப்பு மாவட்டம்**




மனம் மறுத்தது; உடல் ஒத்துழைக்கவில்லை; ஒவ்வொரு அணுவிலும் மயிர்க் காலிலும் அதிர்வு எப்படிப் போகமுடியும்! செயற்கையான தடைகளைக் கருகியல்ல, மனவெழுச்சியின் பின்னிழுப்பை, உறவை வெல்வது எப்படி? போய்த்தானாகவேண்டும்; மீறக் கூடாது. கட்டளை அப்படி! 'நீ ஒருத்தனாவது போய்ச்சேர்ந்து நடந்ததைச் சொல். அடுத்த கட்டங்களுக்கு அது தான் உதவும்' -அதனை மீறமுடியாது; போய்த் தானாக வேண்டும்.

எப்படியாவது குமுதண்ணையையும் கொண்டுபோய்ச் சேர்த்து விடவேண்டுமென்றே மனது அடித்துக்கொள்கிறது. ஆனால் அவரால் முடியாது. காயம் அப்படி படுத்துகிறது அவரை. நிறையவே இரத்தம் வெளியேறி உடல் இயங்க முடியாமல் அவர் கடக்க வேண்டிய ஏழு கிலோமீற்றரை அவரால் தாங்கஇயலாது.

'நான் வெடிக்கப் போறன் நீ எப்படியும் போய் நடந்ததைச்சொல்லு.' திரும்பவும் குமுதண்ணையின் ஆணை!

மனம் இறுகிக் கர்மயோகிக்கேயுரியதாகி நிலைபெறுகின்றது. நான் போர்வீரன், புலிவீரன், கரும்புலிவீரன்; என அணித் தலைவனின் ஆணையேற்றுத் தகவல் சுமந்து எம் தலைவனுக்கு செய்தி சொல்ல வேண்டியவன் அதுவரை நான் சாகமுடியாது! கடமையை செய்யப் போகிறேன். காற்றுப் பிளந்து அகலவொரு பேரோசை! முதுகில் படீரெனச் சிந்தி ஒட்டிய ஈரத்துணுக்குகள் புகை, தீச்சுவாலை ஓ- குமுதண்ணை என்னை வழிநடத்திவந்த அணித்தலைவன்.. இப்போது நான் அவரின் செய்தியைச் சுமப்பவன். இடது காலில் பட்ட ரவையோ, ரவை துளைத்துக் குடைத்தெறிந்த காயமோ, காயத்திலிருந்து பெருகும் இரத்தமோ அதன் பெரு வலியோ, புலரப்போகும்பொழுதில் சிங்கத்தின் வாயெனச் சூழ்ந்திருக்கும் பகையோ எதுவும் பொருட்டல்ல குமுதண்ணையின் கட்டளையே என் பணி, அவன் நகரத் தொடங்கினான்.

31.01-1998 ஞாயிறு அதிகாலை தை மாதத்திற்கேயுரிய மரமுங்கொடுக்கும் பனிக் குளிர் இருள்சூழ்ந்த அந்தப் பொழுதின் அந்த மரத்தினூடே ஒளிதேடும் ஒளிகளினூடே அணியொன்று நகர்கிறது. பல மைல்கள் நீளத்ததுக்கு பரந்து கிடக்கும் பேரரக்கன் வாய்புகுந்து அடித் தொண்டையில் பதுங்கியிருக்கும் நெடுந்தொலைவுச் சுடுகுழல்கள் அழிப்பதே பணி. மீசை ரோமங்களென முன்னனி நிலைகள் அவையுடைத்துப் புகுந்தால் வரிசைப் பற்களென உள்நிலை அரண்கள். சூழவும் லேசர்கண்களென கண்காணிப்பு கோபுரங்கள் வலிய நகங்களென மினி முகாம்கள், மிக பலத்துடன் சிங்கம் மதாப்பாய், மமதையாய் கிடக்கிறது கூடவே உசாராய்.

சேறு, தண்ணீர், நுளம்பு என்று இயற்கை பரப்பிவிட்டிருந்த தடைகளைக் கடந்தாயிற்று. இனிச் சிங்கத்தின் முன்வரிசை அரண்கள் முட்கம்பிவேலி அதற்கு முன்னால் கண்ணிவயல் மண் அணை - அதில் காவல் நிலைகள் அதன் பின்னும் முள்வேலி - சுருள்கள் நிலத்துக்கு சமாந்தரமாய் அரையடி உயரத்தில் வலையாய். . . .

அதைக்கடக்கும் போதிலொரு தோழன் வீழ்ந்தான் இன்னுமொரு 'ஒளிக்கதிரை' ரவை பிய்த்துக் குதறிவிட இப்பொழுது அணியில் இருவர் குறைந்து விட்டனர். அதனாலென்ன எடுத்த பணி படமாய்விரிய மீதி அணி விரைகிறது சிங்கத்தின் பல்வரிசை கடந்து நீண்ட தொலைவுச் சுடுகுழல்களின் அமைவிடம் தேடும் பணி இப்போது.

ஒவ்வொரு மயிர்க்காலும் குத்திட்டு நிற்கச் சிலிர்த்தெழுந்துவிட்டது சிங்கம். முன்னிலை அரணுடைத்துப்புகுந்தபோதே அது உலுக்கப்பட்டுவிட்டது. காற்றைத் துளைத்து கிழித்துக் குடைந்துவரும் ரவைமழை அதில் தோய்ந்து குருதியில் நனைந்து படுமுன்பு இலக்கினைக் கண்டறியவேண்டும். கண்டு இலக்கினை அடையவேண்டும்.

தீவிர தேடுதல் இருளின் நடுவே ஒளிகள் குழல்களைத் தேடின ஆனால்..! எதிரி அவற்றை முன்கூட்டியே நகர்த்தி விட்டிருந்தான் குறிவைத்து நகர்ந்த இடம் வெறுமையாய் கிடந்தது. உயர்ந்த மண்மதிலும் சுற்றிவரப் பொயின்ருகளும் சும்மா கிடந்தன. அதிர்ச்சி! இப்பொழுது திரும்பவேண்டும்.

திரும்பவும் விழித்தெழுந்து சிலிர்த்து உசாராகி விட்ட சிங்கத்தின் பல் வரிசையையும் ரோமக் கற்றையும் தாண்டவேண்டும் சூழவும் ரவை மழை!

கட்டளைகள் பிறப்பித்துக்கொண்டிருந்த குமுதண்ணையின் உடலைப்பிய்த்து விடுகின்றன ரவைகள்- பெருகி வழிந்தோடும் குருதி- மிகக்கடுமையான காயம் - இன்னுமொருவீரனும் வீழ்கிறான்.

முதற் தடையுடைக்கும் போதே காலிற் கொழுவிய இருரவைகளின் சிறு காயங்களுடன் இப்போது அவனது இடது காலைத் துளைத்துவிட்டது ரவைக்குளவி, அதுகுடைந்து உயிர் உலுப்புகிறது. கையிலிருந்து குமுறும் எல்.எம்.ஜி. கூடச் சேதமடைய- இப்போது விரைந்து பின்வாங்கவேண்டும். கூடவரக் குமுதண்ணையால் இயலாது.

நீ போ- கட்டளை பிறக்கின்றது- திரும்ப சில மீற்றர்கள் நகர்கையில் பேரோசை சார்ஜரை இழுத்த குமுதண்ணை அவன் உடலில் ஒட்டிக் கொண்டார் - குருதித் துளியாய் சதைத்துண்டுகளாய் கண்முன் கரைந்தான் அந்தக் கரும்புலி அணித்தலைவன்!

பொழுது புலர்கிற பாரம் அழுத்தும் மனம்; காயம் வருத்தும் உடல்; குமுதண்ணையின் கட்டளையைக் கிரகித்து மூளை மட்டும் உந்துகிறது; இருகைகளிலும் குண்டுகள்; மெல்ல மெல்ல நகர்கின்றான் அவன் எங்கும் இராணுவம் நடத்தும் தேடுதல் - கிளியறிங்.

அந்தப் பலநூறு கண்களிற்கும் மறைந்தபடி அவன் வழியில் ஏற்கனவே ரவைகளால் பிய்க்கப்பட்டுவிட்ட இன்னுமொரு கரும்புலி இயலாதிருந்த அவ்வேங்கையுடன் மீளவும் நகர்வு.

ஆனால் அந்த கரும்புலியால் ஏலாமற்போனது- 'தண்ணீ தண்ணீ' அவரைப் பற்றையொன்றுள் மறைவாகவிட்டான் அங்கிருந்த மோட்டைக்குத் தண்ணீருக்காய் நடந்தான்.

நேரம் காலை ஏழுஇருபது தம் குகைபுகுந்த 'களுக்கொட்டிகளைத்'தேடும் படைகள் அண்மித்தன சுற்றித்தேடின காயப்பட்ட கரும்புலியிருந்த பற்றைக்கு அருகே மிக அருகே

மீண்டுமொரு பேரோசை தண்ணீர் கேட்ட கருவேங்கை தண்ணீர் எடுக்கச் சென்றவனின் கண்முன்னே துணுக்களாய்ச் சிதறிக் காற்றோடும் மண்ணோடும். . .

திகைத்துத் திடுக்கிட்ட படைகள் சூழ்ந்தன- துருவின- நிலையெடுத்தன தாகத்துக்கு தண்ணீரெடுக்கப் போனவனுக்கு தண்ணீரே தஞ்சமானது. சிறு அசைவும்

தொடர்ச்சி 15ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்துக்கடவுளின் ஆசிவேண்டும் பௌத்த சிங்களம்!



## திருப்பணி உண்டியல் குலுக்கும் ரத்வத்தை.

மார்ச் மாத முற்பகுதியிலும், நடுப்பகுதியிலும் ரணகோச ஒன்று, ரணகோச இரண்டு ஆகிய இரண்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, இரணை இலுப்பங்குளத்தையும் மடுமாதா ஆலயப் பிரதேசத்தையும் கைப்பற்றிக்கொண்ட சிங்களப் படை, மே மாதம் ரணகோச மூன்றை ஆரம்பித்து மூக்குடைபட்டது. பள்ளமடுப் பகுதியைநோக்கி முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலைச் சந்தித்தது. பெரும் இழப்புக்களையும் சிங்களப்படை சந்திக்க வேண்டியேற்பட்டது.

ரணகோச மூன்று, அடிவாங்கிக்கொண்டதில், சிங்களம் தன் ஆர்ப்பாட்டங்களை ஒதுக்கி சற்று பொறுமை காத்தது. யூன் பத்தாம் திகதி தென்மாகாணசபைத் தேர்தல் ஆகையால் படைத்தரப்பில் ஏற்படும் இழப்புக்கள், தேர்தல் நிலவரங்களைப் பாதிக்கும் ஆகையால் சற்று நிதானம் காத்தது.

தேர்தல் நாள்வரை பொறுத்திருந்த சிங்களம், அன்று காலையே தனது அடுத்த கட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஆரம்பித்தது.

தற்போது பூநகரிப் பகுதியே இலக்கு.

பூநகரியின் கிழக்குப்புறத்தே, பரந்தனில் இருந்து, டாங்கிகள் கவசவாகனங்களின் துணையுடன், குண்டுவீச்சுக்கள், எறிகணை வீச்சுக்களின் பாதுகாப்புடன் சிங்களப்படை முன்னோக்கி நகர்ந்தது.

மறு முனையில், பூநகரியை நெருங்கக் கூடிய வகையில், தரையிறங்கும் முயற்சியில் சிங்களப்படை கடுமையாக ஈடுபட்டது. இரண்டு தரையிறங்கு கப்பல்கள், போராப் பீரங்கிப்படகுகள், வோட்டர் ஜெற்படகுகள் என்பன கடல்வழியாக படையினரைத் தரையிறங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க, பலாலியில் இருந்து படையினரை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட ஒன்பது உலங்குவானூர்திகள் குண்டுவீச்சுவிமானங்களின் துணையுடன் படையினரை இன்னொரு பகுதியில் தரை இறக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

பல முனைகளில் எதிரிமீதான எதிர்த்தாக்குதல்களைத் தொடுத்த விடுதலைப் புலிகள், சிங்களப்படையின் முயற்சியை முறியடித்தனர் என்பதுடன், பெரும் இழப்பையும் ஏற்படுத்தினர். எம்.ஐ.-24, எம்.ஐ-17 ரக உலங்குவானூர்திகள் இரண்டு சேதமாக்கப்பட்ட நிலையில், அதிகாரிகள் உட்பட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட படையினரையும், ஆயுதங்களையும் இழந்த நிலையில் சிங்களப்படையினர் தமது பழைய நிலைகளுக்கே பின்வாங்கிக்கொண்டனர்.

இராணுவம் தோற்றுப்பின்வாங்கி தனது முன்னைய நிலைகளிலேயே முடங்கிக்கொள்ள, பலாலி இராணுவத்தலைமையோ இது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையே எனவும், அன்றைய தினமே அந் நடவடிக்கை நிறுத்திக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. இம்மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின் இலக்கு என்ன என்பதுதான் புரியாமல் உள்ளது.

இந்தத் தோல்வியின் வெளிப்பாடாக, அடுத்த நடவடிக்கையை, சிங்களப்படை மறுமுனையில் ஆரம்பித்தது. இதற்கு அது சூட்டிக்கொண்ட குறியீட்டுப்பெயர், ரணகோச நான்கு. மன்னார் பூநகரி வீதியில் விடத்தல்தீவு நோக்கி முன்னேறும் நோக்கத்துடன் புறப்பட்டது சிங்களப்படை.

சிங்களப்படையினர் ஒரு தந்திரத்தை வகுத்துச் செயல்படுவது நன்கு புலப்பட்டு நிற்கின்றது. இதனைத் தந்திரம் என்பதிலும் பார்க்க அதன் இயலாமையின் வெளிப்பாடு என்றே கொள்ளப்படுதல் வேண்டும். எங்கெங்கே விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்த தயாராக நிற்கின்றார்களோ, எங்கெங்கே விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல் இருக்கின்றதோ, அப்பகுதிகளை விடுத்து, விடுதலைப் புலிகள் இல்லை, அல்லது, அப்பகுதிகளில் அவர்களின் எதிர்ப்புக்கள் இருக்கப்போவதில்லை என, உணரும் பகுதிகளில் ஆர்ப்பாட்டமாக முன்னேறுவதை, சிங்களம் தனது வீரத்தனமான செயற்பாடாக வரிந்துகொண்டிருக்கின்றது என்பது புலப்படுகின்றது.



விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டு எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்து, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மாங்குளத்துடன் கைவிடப்பட்டது. அதுபோன்று, கிழக்குப்புறத்தே, நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டான்வரை முன்னேறிய சிங்களப் படை, மேற்கொண்டு முன்னேறுவதில் இருக்கக்கூடிய ஆபத்தை உணர்ந்துகொண்டு, தனது அடுத்தகட்ட ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை நிறுத்திக்கொண்டது.

மார்ச் மாதத்தில் இருந்து, பிரதான பாதையின் மேற்குப்புறத்தே, மன்னார்ப் பகுதியிலேயே சிங்களப்படை தனது இராணுவ நடவடிக்கைகளை தற்போது நடத்திவருகின்றது.

விடுதலைப் புலிகளின் எதிர்ப்புகள் இன்றி, முன்னேறி, பிரதேச முக்கியத்துவம் இல்லாத பகுதிகளை ஆக்கிரமித்து, கணக்குக் காட்டுவதே சிறிலங்கா அரசின் தற்போதைய இராணுவ அரசியல் செயற்பாடுகளாகியுள்ளன.

எத்தனை சதுரக்கிலோ மீற்றர்கள் பிடிக்கப்பட்டன, எத்தனை கிராமசேவகர் பிரிவு, எத்தனையாயிரம் மக்கள் இராணுவத்தின் பிடியுள் கொண்டுவரப்பட்டனர் என்று கணக்குக் காட்டுவதே சிறிலங்கா அரசின் பிரதான வேலைத்திட்டமாக மாறியுள்ளது.

யுத்தகளநிலவரம், சிங்களத்தின் வீரத்தையும், அதன் மனோதிடத்தின் மகிமையையும் புலப்படுத்தி நிற்க, விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை வெற்றிகொள்ள, ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்றைந்தாம் ஆண்டில் இருந்து ஏராளமான காலக்கெடுக்களை அள்ளிவழங்கிய ரத்வத்தை, தற்போது, திருப்பணி உண்டியல் குலுக்க ஆரம்பித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளை வெல்லவேண்டுமாக இருந்தால் கோபுரத்துடன் கூடிய பிரமாண்டமான

> விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை வெற்றிகொள்ள, ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்றைந்தாம் ஆண்டில் இருந்து ஏராளமான காலக்கெடுக்களை அள்ளிவழங்கிய ரத்வத்தை, தற்போது, திருப்பணி உண்டியல் குலுக்க ஆரம்பித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளை வெல்லவேண்டுமாக இருந்தால் கோபுரத்துடன் கூடிய பிரமாண்டமான இந்து ஆலயம் ஒன்று கட்டிமுடிக்கப்படவேண்டும் என, தற்போது ரத்வத்தை கூறிவருகின்றார்.

இந்து ஆலயம் ஒன்று கட்டிமுடிக்கப்பட வேண்டும் என, தற்போது ரத்வத்தை கூறி வருகின்றார். கொழும்புக்கு வடக்கே, முத்துராஜவெல என்ற இடத்தில், கோவில் கட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில், தமிழகத்தில் அமைந்துள்ள சிறீரங்கம் ஆலயமும் அதன் கோபுரமும், சிறீலங்காப் படையின் பிரகாசமான வெற்றியைப் பாதிக்கும் விதத்தில் தன் சக்திக்கணைகளை வீசுவதாக, அறிந்துகொண்டுள்ள சந்திரிகா ரத்வத்தை கூட்டு, அதன் சக்தியை இல்லாமல் செய்யும் வகையில், பிரமாண்டமான கோபுரத்துடன் கூடிய இந்துக்கோவிலை தலைநகரில் கட்டத் தீர்மானித்திருக்கின்றது.

ஆனால், பௌத்த சிங்களப் பேரினவாதிகளோ இதனை எதிர்க்கின்றனர். யாரோ ஒரு இந்துமதச் சாத்திரி கட்டிவிட்ட கதையால், அரசாங்கம் குழப்பத்தில் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

பௌத்த பிக்குகளின் ஆசிபெற்று நல்ல நாள் நேரம் கணித்து ஆரம்பித்துவைக்கப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கி, படாதபாடு பட்டதில், குழம்பிப்போயுள்ள ரத்வத்தையும் சந்திரிகாவும், ஏதோ மறைமுகமான தெய்வசக்தியின் கை இதற்குப் பின்னால் இருப்பதாக கருதுகின்றனர்.

அதனால், இந்துக் கோவில் மற்றும் கோபுரம் குறித்த கருத்தை அலட்சியப்படுத்துவதற்கு, அவர்கள் தயாராக இல்லை.

சமாதான முயற்சியில் மீண்டும் இறங்கியுள்ள, கொழும்பு வர்த்தகத்தலைவர்களை அண்மையில் சந்தித்த அமைச்சர் ரத்வத்தை, விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள, அறுநூறு மில்லியன்ரூபா செலவில் அமைக்கப்படஉள்ள, இந்து ஆலயத்தின் நிர்மாண வேலைகளுக்காக நிதியுதவி கோரியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளை வெல்வதற்காகவே, இந்துக்கோவில் கட்டப்போகும், ரத்வத்தையோ சந்திரிகாவோ, தம்மால் அழிக்கப்பட்ட இந்து ஆலயங்களினதும், தேவாலயங்களினதும், தொகையை மறந்துவிட்டார்கள் போல்உள்ளது. பல்லாயிரக் கணக்கான இந்து ஆலயங்களும், கிறித்தவ ஆலயங்களும் மக்கள் நெருங்க முடியாத இராணுவ வலயங்களுக்குள் அகப்பட்டுள்ளன. பல கோவில்களில் புதர்கள் மண்டிக்கிடக்கின்றன. பூசைகள் நடப்பதில்லை. மக்களும் செல்வதில்லை. புனிதத் தலங்களை சிங்கள இராணுவம் அசிங்கப்படுத்திவருகின்றது. அதன் கழிப்பறையாகவும், கேளிக்கை விடுதிகளாகவும், இந்து ஆலயங்கள் மாற்றப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் செய்துகொண்டு, கொழும்பில் கோபுரம் கட்டுவதால், தெய்வத்தின் அனுக்கிரகம் கிடைக்குமா? அநீதியான யுத்தம் நடத்தி ஒரு இனத்தையே அடிமைப்படுத்தி அழிக்கத்துணியும் பௌத்த சிங்களப்பேரினவாதத்திற்கு, புத்தபெருமானின் ஆசிகூடக் கிடைக்கச் சாத்தியமில்லை.

இதை யாராவது சாத்திரிமாரோ, அல்லது சோதிடர்களோ சந்திரிகாவிற்கோ ரத்வத்தைக்கோ எடுத்துக்கூறினால், பலன் கிடைக்கச் சாத்தியமிருக்கின்றது. விடுதலைப் புலிகளை வெல்வதற்கல்ல, சிங்களத்தின் சித்தத்தை தெளியவைக்க வாய்ப்பிருக்கின்றது.

சுப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடியலைத் தேடி

-செம்மலையூர் நவநீதன்-

முல்லை மண்ணின் எல்லைக் கிராமம் சிலாவத்தை. மாலை வேளை பறவைகள் கூடு திரும்பிக் கொண்டிருந்தன. மாலைநேரச் சூரியனின் ஒளி நந்திக்கடலில் பட்டு கடலையே மஞ்சள் நிறமாக்கிக் கொண்டிருந்தது. சூரியனுக்கும் பூமிக்கும் தங்கக் கம்பிகள் இணைக்கப்பட்டது போல் சூரியக் கதிர்கள் வெண் முகில்க் கூட்டங்கள் அவசரமாக எங்கோ ஓடிக்



கொண்டிருந்தன. அந்த இனிமையான மாலைப் பொழுதில் மேகம் சூரியனை மெல்லமெல்ல விழுங்க ஆரம்பித்தது. ஒளி அகன்று இருள் சூழ்ந்து கொள்கின்றது. அப்போது தான் பற்றைக் காட்டினுள் உருமறைப்புச் செய்து இருளுக்காகக் காத்திருந்த போராளிகள் ஒன்று கூடுகின்றனர். தளபதி அணித்தலைவர்களுக்கு தாக்குதல் திட்டத்தை தெளிவு படுத்தி முடிக்கிறார். ஒவ்வொரு அணித்தலைவர்களுக்கும் அந்த இராணுவ முகாமின் ஒவ்வொரு பகுதி முற்றுகையிடுவதற்காக பிரித்து வழங்கப்படுகின்றது. இனியவனும் முகாமின் கிழக்குப் பக்கமாவுள்ள ஐந்து காவலரண்களை முற்றுகையிடும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றான். அப்போது தான் அந்த வேத நாமம் ஓங்கி ஒலிக்கின்றது. "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" படையணிகள் நகர ஆரம்பிக்கின்றன. இனியவன் தனது அணியை உற்சாகப்படுத்தி முன் நகர்த்துகின்றான்.

"அண்ணா'' என்ற குரல் கேட்கின்றது. ஆம், அது அவனுக்குப் பரீட்சையமான குரல் கேட்ட திசையை நெருங்குகின்றான். ஒரு கணம் திகைத்து நின்றான். அது வேறு யாருமில்லை அவனது அன்புத் தங்கையே, "தங்கச்சி! நீ எப்ப இயக்கத்திற்கு...'' என்று கூறி முடிக்கு முன் மகளிர் படையணியை நகருமாறு கட்டளை வருகின்றது. "சரி தங்கச்சி நான் போட்டு வாறன் சண்டை முடியக்கதைப்பம்'' என்று கூறி விடைபெற்றான். அவளும் பிரிய மனம் இல்லாமல் விடை கொடுத்தாள். தாக்குதல் படை அணிகள் முல்லைத்தீவு முகாமை நெருங்குகின்றன. முகாமினுள் இராணுவத்தினர் கதைப்பதுவும் அட்டகாசமாகச் சிரிப்பதுவும் தெளிவாகக் கேட்கின்றது.

படையணிகள் இராணுவமுகாமின் முன்னணிக் காவலரணருகே நிலையெடுத்துக் கொள்கின்றன. இனியவனும் தனது அணியினரோடு நிலையெடுத்துக் கொண்டு தளபதியின் கட்டளைக்காக காத்திருக்கின்றான். அப்போது அவன் தனது கடந்த காலத்தை இரை மீட்கத் தொடங்கினான்.



ஓர் அமைதியான அதிகாலைப் பொழுது. அன்றைய காலை மட்டும் ஏனோ ஓர் மயான அமைதியாய் சேவல் கூவவில்லை, காகம் கரையவில்லை.

கீச்சிடும் குருவிகள் இரைதேடிப் பறக்கவில்லை. சுந்தரத்தின் கடைசிப்பிள்ளை நோய்வாய்ப் படுக்கையில் முனகிக் கொண்டே இருந்தது. விறாந்தைக் கப்போடு சாய்ந்திருந்த சுந்தரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அவருடைய முகத்தில் ஏனோ இனம் புரியாத ஏக்கம் இளையோடி இருந்தது. மனைவி மங்களம் கூறினாள் "வாப்பா போவோம் என்ர பிள்ளை எனக்கு முன்னால துடியாய் துடிக்கிறதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது'' "நீ வீட்டில இரு மங்களம் நான் கொண்டு போட்டு வாறன்'' என்ற சுந்தரத்தின் குரலை இடைமறித்து அவள் கூறினாள். "ஓம்... ஓம்... நீங்கள் போன பிறகு என்ன நிம்மதியாய் இருப்பேனெண்டா பாக்கிறியள். வாங்கோ ரெண்டு பேருமே போவம்'' என்று முடித்தாள். நோய்ப்படுக்கையில் கிடந்த தங்கையின் தலை மாட்டிலிருந்த சுந்தரத்தின் மகள் தலைக்கு மேலால் செல்லும் ஒவ்வொரு ஷெல்லும் வீழ்ந்து அதிரும் போது தங்கையின் காதுகளைப் பொத்திக் கொண்டாள். மூத்தவன் ஷெல்கள் விழுந்து வெடிக்கும் திசையை வெறித்தப் பார்த்துக் கொண்டிருந்தான். தாய் மங்களம் கூறினாள், "தம்பி மூத்தவா துவாயையும் போர்வையையும் எடுத்து மடிச்சுவை ஆஸ்பத்திரியில் நிற்கவேண்டி வந்தாலும்'' அவர்கள் புறப்பட ஆயத்தமானார்கள் சுந்தரம் மகனை அழைத்தார் "மூத்தவா நாங்கள் போய்ட்டு வாறம் ஏதும் பிரச்சனை எண்டால் அம்மம்மா வீட்டை போய் நில்லுங்கோ தங்கச்சியை கவனமாப் பார்த்துக் கொள் நாங்கள் வந்திடுவம்'' மங்களம் பிள்ளைகள் இருவரையும் ஏக்கத்துடன் பார்த்துவிட்டு குழந்தையை தூக்கித் தோளில் போட்டுக்கொண்டாள். நடக்க ஆரம்பித்தனர் சங்கக்கடைச் சந்திக்கு வந்தனர் ஊர் அடங்கியிருந்தது விடிந்து ஒன்பது மணி கூட ஆகவில்லை. அவர்கள் பதட்டத்துடன் மூன்றாம் கட்டை நோக்கி நடந்தனர். தூரத்தில் மஞ்சல் பாலம் தெரிந்தது இருவரும் திரும்பிப்பார்த்தார்கள். கண்ணகை அம்மன் கோயில் வெகு துல்லியமாகவே தெரிந்தது. அவர்களது தலைக்கு மேலாகச் ஷெல்லொன்று சென்று வெடித்தது. "அம்மாளாச்சி நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்றவாறு நடந்தனர். சலித்துப் போனவராய் இருவரும் "இவங்கள் அடிக்கிற ஷெல் லால எங்கட பொடியளுக்கோ அவங்கட உடமைகளுக்கோ சேதம் வரப்போவதில்லை எங்களப் போல அப்பாவிகளைக் கொல்வதற்கு தான் பாடையில போவான் அடிச்சுத் தள்ளுறான்''.

என்று தனது மனக் குமுறலைக் கொட்டித்தள்ளினார் சுந்தரம். சுந்தரம் இளவயது முதல் எவருக்கும் பயந்ததில்லை. ஆனால் இன்று அந்த அரக்கர்களின் துப்பாக்கிமுன்....

தூரத்தே மூன்றாம் கட்டைச் சந்தி தெரிந்தது திடிரென அவர்களை நோக்கி வெடிச்சத்தங்கள் "கான்ஸ் அப்'' எனக் கத்திக் கொண்டே பற்றைக்குள் இருந்து வந்த பச்சைப் பேய்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டன.



"அய்யா ஆஸ்பத்திரிக்கு...'' அவனது நெஞ்சில் ஓர் உதை விழுந்தது. அவளது தோளில் இருந்த குழந்தையை ஒருவன் பறித்தான். அவனுக்குப் புரியாத மொழியில் ஏசியவாறு மேலும் பல உதைகள் விழுந்தன. ஒரு காடையன் குழந்தையின் கழுத்தை "ஆ..... அம்மா....." குழந்தை வீரிட்டு அழுதது. சில நொடிகளில் நிரந்தரமாகவே மௌனமானது. "ஐயோ என்ர பிள்ளை" என்றவனது தலையை துப்பாக்கியின் அடிப்பாகம் பதம் பாக்கவே அப்படியே மயங்கிச் சரிந்தான். அவன் கண் விழித்தபோது குழந்தை பக்கதிலிருந்த சூரைப்பற்றையில் தொங்கிக் கொண்டிருந்தது. அப்பவே மனைவி மங்களம் 'அலங்கோலமாகக்' கிடந்தாள். துள்ளியெழுந்த சுந்தரம் அவளருகே நின்ற காடையனை எட்டி உதைத்தவாறே எழமுயற்சித்தான் அதற்கிடையில் இன்னொரு காடையனின் துப்பாக்கிக் குண்டுகள் அவனது உடலை சல்லடை போட்டன. மறுவினாடி இரத்த வெள்ளத்தில் இரண்டு உடல்களும் மௌனமாய் உறங்கிக் கொண்டிருந்தன.

மறுநாள் பொழுது புலர்ந்தது மூத்தவன் தங்கச்சியை அம்மம்மா வீட்டில் விட்டு பெற்றோரைத் தேடிப் புறப்பட்டான். அப்போது தான் அவனைத் தேடி வந்த ரவி அண்ணர் தான் மரத்திலிருந்து பார்த்த அந்தச் சம்பவத்தை கண்ணீர்மல்க கூறி முடித்தார். கத்துவதற்கோ அழுவதற்கோ தெரியாது, அவன் வாயினைத் திறந்தான்.

அன்று தான் மூத்தவனின் கால்கள் விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பாசறை நோக்கி நடந்தது. அவனுக்கு இப்போதுதான் தெரியும் போராளி தான் மட்டுமல்ல தனது தங்கச்சியும் என்று. தளபதியிடம் இருந்து கட்டளை வருகின்றது. இனியவன் நினைவு திரும்புகின்றான் கடற்கரையோரமாகக் கேட்ட வெடியோசையோடு தாக்குதல் தொடங்குகின்றது. இனியவன் தனது அணியை உற்சாகப்படுத்தி முன்னணிக் காவலரணை உடைத்துக் கொண்டே உள்ளே நுழைகின்றான். பராலைற்றுக்கள் இரவைப் பகலாக்குகின்றன. எத்திசையிலும் ஆயுதங்கள் இடியென முழங்கிக் கொண்டிருக்கின்றன. இனியவனது அணி பத்து நிமிடத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட பகுதியை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகின்றது. தளபதிக்குச் செய்தி அனுப்புகின்றான். அப்போது தான் எங்கிருந்தோ வந்த ஷெல் அவனருகே வீழ்ந்து வெடிக்கின்றது. நாலாதிசையிலும் படையணிகள் முன்னேறி இராணுவமுகாம் புலிகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுகின்றது. படையணிகள் மாற்றப்படுகின்றது. சண்டையில் ஈடுபட்டிருந்த அணிகள் ஓய்வுக்காக பின்நகர்த்தப்படுகின்றன. அப்போது தான் அண்ணாவிடம் கதைக்க வேணும் என்ற ஆர்வத்தடன் அவளது கண்கள் ஆர்வத்துடன் அண்ணாவைத் தேடுகின்றன. அங்கே வோக்கியில் ஏதோ கதைத்துக் கொண்டிருந்த பொறுப்பாளர் அவளது காதுக்குள் குசுகுசுக்கின்றார்.

அவளது கண்கள் கலங்கு கின்றன. ஆம் கண்கள் கலங்கிய போதும் இலட்சியத்தின் மீதான பற்று மேலும் இறுகிப் போகின்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கணப்பொழுது



## உம் லெப். சுரேந்தினி

வலிகாமத்தின் வடபகுதியில் அமைந்த அழகிய கிராமம் தான் இளவாலை. விவசாயிகளின் கைவண்ணத்தில் பசுமை குறையாது செழிப்புடன் விளங்கியது. தமிழீழ சுதந்திரப்போராட்டத்திற்கு பெரும் உறுதுணையாக பல ஆண், பெண் போராளிகளைத் தந்து புகழ்பூத்த மண்ணது. அந்த மண்ணில் பிறந்ததாலோ என்னவோ ஜனந்தினியும் அச்சம் சிறிதும் இன்றி ஆயுதம் கரத்தில் ஏந்தி களம் பல கண்டு வீரச்சாவை புகழுடன் தழுவிக் கொண்டவள்.

இளவாலையைச் சேர்ந்த பரமானந்தம் தம்பதிகளுக்கு மூன்று சகோதரர்களுக்கு ஒரே ஒரு அன்புச் சகோதரியாக ஜனந்தினி மலர்ந்தாள். ஒரேயொரு பெண் குழந்தை என்று பெற்றோரும் இனத்தவர்களும் மிகச் செல்லமாக ஜனந்தினியை வளர்த்தார்கள். அவளை நல்லமுறையில் கற்பித்து ஆளாக்க வேண்டுமென பெற்றோர் பெருவிருப்புக் கொண்டனர். அவர்களின் விருப்பத்துக்கமைய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் தனது கல்வியை ஜனந்தினி ஆரம்பித்தாள். கல்வியில் அவள் கொண்ட விருப்பு அவளை ஆவலுடன் படிக்கத் தூண்டியது. ஒவ்வெரு வகுப்பிலும் தங்கு தடையின்றிச் சித்தியெய்தினாள். இவளின் கல்வித்திறமையைப் பார்க்கக் கொடுத்துவைக்காமல் தந்தையார் இவளது சிறுவயதிலேயே காலமாகிவிட தாயின் அன்பான அரவணைப்பில், அவள் கொடுத்த ஊக்கத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் திறமைச் சித்திகள் பல பெற்று சித்தியெய்தினாள். உயர் வகுப்பை உன்னதமாகப் படித்துத் தேறிவிடவேண்டுமென உறுதியான எண்ணத்தடன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் அவளது எண்ணத்தைக் கலைத்தது சிறீலங்கா இராணுவத்தின் தமிழர் மீதான தாக்குதல்கள்.

சிங்கள இராணுவம் தமிழர் மீது கோரத் தாக்குதல்கள் மாத்திரம் மேற்கொள்ளவில்லை. ஒரு இன அழிப்பையே மேற் கொண்டிருந்தனர் அத்தோடு தமிழரின் முன்னேற்றத்துக்கான கல்வியை திட்டமிட்டு அழிக்க முற்பட்டனர். அவர்களின் கொடூரத்தனமான குண்டு வீச்சுக்கு அடிக்கடி தமிழ்ப்பிள்ளைகள் படிக்கும் கல்விக் கூடங்கள் இலக்காகிச் சிதறின. இராணுவ நடவடிக்கைகளால் சேதமுறாத பள்ளிக் கூடங்களே தமிழ் மண்ணில் இல்லை என்று சொல்லலாம். கல்வியில் மேன்மை அடைய வேண்டுமென பெருவிருப்புக் கொண்டிருந்த ஜனந்தினியின் மனதை இது பெரிதும் பாதித்தது. தமிழ் மக்களின் உயிரினும் மேலான பொக்கிசமான கல்வியை பயில வாய்ப்பில்லாத நிலையை உருவாக்கிய அந்த எதிரிமீது ஜனந்தினி



உள்ளூரக் கோபம் கொண்டாள் 'கல்வி... கல்விக்குத் தடையாய் இருக்கிற இந்தப் பேய்களை.....' கோபத்தில் குமுறியவள் எதிரியை ஒழிக்க 1995ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அணியில் போராளியாக இணைந்து கொண்டாள். 30வது பயிற்சி முகாமில் தனது ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள். பயிற்சியின் நுட்பங்களை மிக இலகுவாகப் புரிந்துகொண்டு பொறுப்பாளர்களின் நன் மதிப்பைப் பெற்றுக் கொண்டாள். பயிற்சி முடிந்து வெளியேறும் போது சுரேந்தினி என்னும் போராளியாக வெளிவந்தாள். பயிற்சி முடிந்த பின் மற்றைய போராளிகளுடன் உயிர் காக்கும் சேவையான மருத்துவப் பகுதிக்கு அந்தத் துறையைப் பயில்வதற்காக அனுப்பப்பட்டாள். அந்த மருத்துவக் கல்வியும் பயிற்சியும் சுரேந்தினிக்கு பெரும் அக மகிழ்வினைத்தந்தது. போருக்குப் பக்கபலமான பெரிய சேவை மருத்துவசேவை. போரில் காயப்படும் ரோளிகளின் உயிரைக் காப்பாற்றவதும் குணமடையச் செய்து எதிரியை அழிக்க மீண்டும் களம் அனுப்பும் பாரிய பணியை மருத்தவப் பிரிவல்லவா செய்து கொண்டிருக்கின்றது. அந்தச் சேவையில் விருப்புடன் செயலாற்றியதாலோ என்னவோ சுரேந்தினியின் முகம் எந்நேரமும் சாந்தமாக அமைதியாக இருக்கும். சக போராளிகளுக்கு எந்த நேரத்தில் எந்த வித உதவி என்றாலும் சிறிதும் தயங்காமல் இன்முகத்தடன் செய்து முடிப்பாள். கோபம் என்பதை இவளிடம் காணவே முடியாது. மருத்துவத்துறையில் மிகவும் திறமையாகவும் கடமை உணர்வுடனும் செயற்பட்டாள்.

தான் மாத்திரம் திறமையாக இருந்தால் போதாது மற்றவர்களும் திறமைசாலிகளாக வரவேண்டும் என்பதற்காக தான் கற்ற அறிவினை மற்றவர்களுக்கும் எடுத்து விளக்குவாள். தமிழர் வாழ்வைக் குலைத்து இனத்தின் குரல்வளையை முற்றாக நறுக்கிவிடவென சிங்கள இராணுவத்தால் சூரியக்கதிர் 01 நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இரவு பகல் பாராது கண் விழித்த போராளிகளைக் காப்பாற்றுவதில் கடமை உணர்வில் ஈடுபட்டாள். அவளது சேவையைப் பெற்று எத்தனையோ போராளிகள் மீண்டும் களம் ஏறினார்கள். மருத்துவம் என்கின்ற அந்தப் புனித சேவையில் அவள் தொடர்ந்து ஈடுபட்டாள். சூரியக்கதிர் 01 நடவடிக்கையை அடுத்து முல்லைச்சமர்க் களத்தில் அவளது மருத்துவப் பணி தொடர்ந்தது. போர்க்களத்திற்கு மிக அருகே அவள் பணிவிடம் அமைந்திருந்தது. எதிரியின் வெறி கொண்ட தாக்குதலுக்கு சுரேந்தினி குறியானாள். அவள் உடல் தளர்ந்தது. மெல்லமெல்ல மண்ணில் சரிந்தாள். தமிழர் தம் போர்க் காவியம் படைத்த முல்லைமண் அவள் உடலைத் தழுவிக் கொண்டது. அவள் மாவீரர் ஆனாள்.

இவளின் அன்பான நெருக்கமும் திறமையான செயற்பாடுகளும் இவளது சக போராளிகளுக்கு என்நாளும் அவளை நினைவு கூரச்செய்யும். அவள் விட்டுச் சென்ற பாதையில் உறுதியுடன் விரையும் கால்கள் வெகுவிரைவில் தமிழீழம் வென்றெடுக்கும்.

எழுதியவர் - போராளி

---

1ம் பக்கத் தொடர்ச்சி

முனைக்குச் சென்ற மாணவர்களிடையே உரையாற்றும் போது கூறியுள்ளார்.

களமுனைக்குச் சென்ற மாணவர்களிடையே தளபதி லொறன்ஸ் அவர்கள் உரையாற்றுகையில் சந்திரிகா அம்மையார் எமது மக்களிடம் ஒட்டுமொத்தமாக போரைத் திணித்துள்ளார். இதனை எதிர்கொள்ளும் விதத்தில் மக்கள் தயாராகி வருகின்றார்கள். மக்கள் ஒன்று சேரும் போது எமக்கு நிச்சயம் வெற்றிகிடைக்கும் என தளபதி லொறன்ஸ் குறிப்பிட்டார்.

களத்திலுள்ள போராளிகளுக்கு உலர் உணவுப் பொருட்களுடனும், பழவகைகளுடனும் சென்ற முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்களுக்கு இன்றைய களநிலைமை பற்றியும், அதன் தேவைகள் குறித்தும் சிறுத்தைப் படையணியின் மகளிர் தளபதி சுகத்திரா, கல்விக்குழு களமுனைப் போராளி நிலவன் மற்றும் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோரும் உரையாற்றினார்கள். களமுனைக்குச் சென்ற மாணவர்கள் தளபதிகளையும், களமுனைப் போராளிகளையும் நேரில்கண்டு அவர்களது நிலைமையை நன்கு அறிந்து கொண்டார்கள்.

இதேவேளை வட்டக்கச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு.சுப. தமிழ்ச்செல்வன் பேசுகையில் இந்த சந்ததியின் காலத்திலேயே சுதந்திர தமிழீழத்தை பெற்றெடுக்க வேண்டிய நிலையில் இன்றைய இளம்சந்ததியினர் ஆகிய நாம் அனைவரும் எம் தலைவனின் வழிகாட்டலில் அணி திரள வேண்டிய தேவையில் நிற்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

கடந்த 25ம் திகதி வட்டக்கச்சியில் பொதுசன அமைப்புக்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வெகுஜன அமைப்புக்களின் தலைவர் திரு. சாம்பசிவம் தலைமை தாங்கினார். இந் நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள், போரெழுச்சிக் குழுவினர், வெகுஜன ஒன்றியம், தொழிற்சங்கங்கள் ஆகியன கலந்து கொண்டன.

மேலும் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சுப.தமிழ்ச்செல்வன் பேசுகையில் இன்றைய போராட்டம் மக்கள் போராட்டமாக தோற்றம் பெற்றுவருகின்றது. இன்றைய போராட்டமானது பல பரிமாணங்களைத் தோற்றுவித்து வெல்லும் தறுவாயில் உள்ளது. எந்த ஒரு போராட்டமும் மக்கள் மயப்படுத்தாமல் வெற்றி பெற்றதில்லை எனக் குறிப்பிட்டார்.

மேலும் இச் சந்ததியின் காலத்திலேயே சுதந்திர தமிழீத்தை பெற்றெடுக்க வேண்டிய தேவையை இன்றைய இளைய சந்ததியினர் அனைவரும் எம் தலைவனின் காலத்திலேயே அணிதிரள வேண்டிய தேவையில் நிற்கிறோம். எமக்குப் பின்னால் வரும் சந்ததி இதை சுமக்க விடக்கூடாது. எனவே நாம் அனைவரும் எமது காலத்தில் எம் தலைவனின் வழிகாட்டலில் தேச விடுதலையை வென்றெடுக்க அணி திரள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியொன்பது

## லியோன் யூரிஸ்

தொடர்ச்சி...

கட்டும் துறை நெடுகவும் பலர் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்து கொண்டு நின்றனர். சில பிரிட்டிஷ் போர் வீரர்கள் தோளைக் குலுக்கி விட்டபடி தலையைச் சொறிந்து கொண்டுநின்றனர். பிள்ளைகள் இறக்கப்பட்டதும், ட்ரக்குகள் விரைவாக மலைப் பகுதியை நோக்கி ஓட்டிச் செல்லப்பட்டு ஹலேரியன் மலைத் தொடரின் அருகே கைவிட்டுச் செல்வதற்காக நிறுத்தப்பட்டன. அந்தக் கணத்திலிருந்து 23-வது போக்குவரத்துப் பிரிவு, தன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டுத் தன் ஆயுளை முடித்துக் கொள்ளத் தொடங்கியது. ஜோஆப் பிரிட்டிஷாருக்கு அவர்களின் லொறியை பாவித்ததற்காக நன்றி தெரிவிக்கும் செய்தி ஒன்றையும் தன் லொறியில் விட்டு வந்தான்.

அரி, எக்சோடசில் ஏறி, செலுத்தும் அறைக்குச் சென்றான். ஒன்றன் பின் ஒன்றாக லொறிகள் பிள்கைளை இறக்கிவிட்டுச் சென்றன. கப்பலில் எல்லாரையும் ஏற்றிக்கொள்ள 20 நிமிடங்களே பிடித்தன. செவ், டேவிட், ஜோஆப், ஹர்னஸ்சொல்ஸ்பேர்க் ஆகியோர் ஏற்றும் வேலை நிறைவுற்றதாக அறிவித்தனர். அரி, ஹான்ஸ்கிற்கு, கப்பலை விலக்கி இயந்திரங்களை இயக்க ஆணையிட்டான்.

பிள்ளைகளிடம் போங்கள். நாங்கள் என்ன செய்கிறோம் எனத் துல்லியமாக அவர்களிடம் சொல்லுங்கள். அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது என்ன என்று அவர்களுக்குத் தெரிவியுங்கள். யாரவது ஒரு குழந்தை தன்னால் இத்தோடு ஒத்துப்போக முடியாது என்று நினைத்தால், செலுத்தும் அறையில் என்னிடம் தெரிவிக்கட்டும். அவர்களைக் காராஒலொஸ் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும். அவர்கள் எங்களோடு இருந்தால் அவர்களுக்கு உயிராபத்து ஏற்படலாம் என்று தெளிவுபடுத்துங்கள். போகவிரும்புபவர்களுக்கு எதிராக நீங்களோ இருக்கப்போகும் பிள்ளைகளோ எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டாம்.

பால்மாக்குகள் கீழே பிள்ளைகளிடம் இதைத் தெரிவிக்கச் சென்ற அதே வேளை, எக்ஸோடஸ் சிறிது பின்னுக்கு நகர்ந்து நடுத்துறைமுகத்துள் நங்கூரமிட்டுக் கொண்டது.

சில கணங்களுக்குப் பின்பு முழு கைரேனியா பிரதேசமும் சைரன்களின் கீச்சிடும் ஓசையில் அதிர்ந்தது. அரி தனது தொலைநோக்குக் கண்ணாடியைக் கடற்கரையோரப் பாதையிலும், மலைச்சரிவிலும் திருப்பி, டசின் கணக்கான பிரிட்டிஷ் லொறிகளும் ஜீப்புக்களும் கைரேனியாவை நோக்கிச் செல்வதைக் கண்டான். அவன் காலம் சென்ற 23ஆவது போக்குவரத்துப் பிரிவின் ட்ரக்குகள் கைவிடப்படுவதற்காக மலைச்சரிவில் விரைந்து செல்வதைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான். அவைகள் கைரேனியாவிலிருந்து வெளியேறி, உள்ளே வந்து கொண்டிருக்கும், பிரிட்டிஷ் போர் வீரர்களைக் கடந்து அவர்கள் வந்து கொண்டிருக்கும் திசைக்கு எதிர்த் திசையில் சென்று கொண்டிருந்தன.

அரி கீழே நோக்கினான். மேல் தளத்தில் நின்றிருந்த குழந்தைகள் மிக அமைதியாக நின்றிருந்தன.

பிரிட்டிஷார் வெள்ளம்போல் துறை முகப்பகுதியில் புகுந்தனர். லொறி லொறியாக சிப்பாய்கள் கப்பல் கட்டும் துறையில் வந்து குவிந்தனர். பல உயர் அதிகாரிகள் எக்ஸோடஸைச் சுட்டிக்காட்டிக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

போர் வீரர்கள் கடல் சுவரின் இரு பிரிவுகளிலும் ஓடிச் சென்று துறைமுகத்தின் ஒடுங்கிய புகுவழியைக் குறி வைத்து இயந்திரத் துப்பாக்கிகளையும், மோட்டார் பீரங்கிக் குழாய்களையும் பொருத்தி, எக்ஸோடஸ் கடலுக்குத் தப்பிச் செல்ல முயன்றால் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக அவற்றை இயக்க ஆயத்தமாக இருந்தார்கள்.

மேலும் லொறிகள் அந்தப் பகுதிக்குள் வந்து சேர்ந்தன. கப்பல் கட்டும் துறைப்பகுதி கயிறு போட்டுத் தனியாக்கப்பட்டு, ஆர்வமுடன் பார்த்துக் கொண்டு நின்ற பார்வையாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஒவ்வொரு கணமும் பிரிட்டிஷ் பலம் அதிகரிக்கப்படுவதை அரி கவனமாக அவதானித்துக் கொண்டிருந்தான். ஒரு மணித்தியாலத்துக்குள்ளாகவே முற்றாக ஆயுதம் தரித்த ஐந்நூறு போர் வீரர்கள் அங்கு குவிக்கப்பட்டார்கள். துறைமுகத்துக்கு வெளியே நீர்மூழ்கிக் கப்பல்கள் இரண்டு நிலை கொண்டன. அடிவானத்திலே மூன்று நாசகாரிகள் சம்பவம் நடைபெறும் இடத்திற்கு விரைந்து வந்து கொண்டிருப்பதை அரி காணக்கூடியதாக இருந்தது. சைரன்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தன. அமைதியான அந்த நகரம் ஒரு ஆயுதப்படை முகாமாக மாறிக் கொண்டிருந்தது. கப்பல் கட்டும் துறையில் டாங்கிகள் உறுமிக்கொண்டு வந்து நின்றன. பீரங்கிகள் துறைமுக நுழைவாயிலை காவல் செய்து கொண்டிருந்த இயந்திரத் துப்பாகிகளையும் மோட்டார்களையும் மாற்றீடு செய்தன.

இன்னொரு தொகுதி சைரன்களின் அலறல், பிரிகேடியர் சுதர்லண்ட், கால்ட்வெல், அலிஸ்ரர் ஆகியோரைத் தாங்கிய கார்ரொன்றை கட்டும் துறைக்குள் கூட்டி வந்தன. கைரேனியாப்பகுதியின் பொறுப்பதிகாரி மேஜருக்கு உடனடியாகவே சுதர்லாண்ட் அருகில் பிரசன்னமானார். 'அதோ அது தான் அந்தக்கப்பல் அது யூதர்களால் நிறைந்திருப்பதாக சொல்வது சரிதான். அது தப்பிப் போக முடியாது'

சுதர்லண்ட் துறைமுகத்தைக் கவனமாக அவதானித்தார்.


“ஒரு பான்சர் டிவிசனை (Panzer Division — ஜெர்மன் தாங்கிப் பிரிவு) எதிர்த்துச் சண்டையிடத் தேவையானவற்றை இங்கே வைத்திருக்கிறாய்” என்று சொன்ன அவர் “அந்தக் கப்பலில் இருப்பவர்கட்குப் பைத்தியம் பிடித்திருக்கவேண்டும். ஒரு ஒலிபெருக்கி அமைப்பை உடனடியாக ஏற்படுத்து” என்று தொடர்ந்தார்.

“சரி சேர்”

“என்னைக் கேட்டால் அவர்களை அப்படியே நீருக்கு வெளியே தகர்த்தெறிய வேண்டும் என்பேன்” என்றார் கால்ட்வெல்.

“நான் உன்னைக் கேட்கவில்லை” சுதர்லண்ட் வெடித்தார். தொடர்ந்துக் இந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து விடு: கப்பலில் ஏறுவதற்குக் குழுவொன்றை ஆயத்தம் செய். கண்ணீர்ப் புகை சிறிய ரக ஆயுதங்கள் இருந்தால் அவர்கள் தாமாகவே வராதபட்சத்தில் பாவிக்கலாம். பிறெடி, டோம் ஹோட்டலுக்குப் போய் நான் செய்தியை இருட்டடிப்புச் செய்யச் சொன்னதாக தலைமையகத்திற்கு அறிவித்து விடு'

அலிஸ்ரர் மௌனமாக இழுவைப்



படகை அவதானித்துக் கொண்டிருந்தார்.

“நீ இதைப்பற்றி என்ன நினைக்கிறாய் அலிஸ்ரர்?”

“நான் இந்த முறையை நம்பவில்லை அவர்கள் வேறேதோ மனதில் திட்டமில்லாமல் இந்தப் பட்டப் பகலில் தப்பியோடுவதை ஏற்பாடு செய்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.”

“சரிதான், அலிஸ்ரர் நீ எப்போதுமே பயங்கரமான திட்டங்களை எதிர்பார்ப்பவன்.”

மார்க் பார்க்கர் காவலர்களைக் கடந்து இரண்டு அதிகாரிகளையும் நெருங்கினான்.

“இங்கே என்ன இவ்வளவு ஆர்ப்பாட்டம்?” மார்க் அலிஸ்ரரைக் கேட்டான்.

மார்க் பார்க்கரைக் கண்டதும் தனது சந்தேகம் சரியானதுதான் என அலிஸ்ரர் நினைத்தார். “உண்மையில் நீதான் எங்களுக்குச் சொல்ல முடியும் நல்ல பிள்ளை போல் அதைச்செய் அடுத்தமுறை நீ எனக்குத் தொலைபேசியை எடுக்கும்முன் உனது பிரிட்டிஷ் பாணி உச்சரிப்புக்களைக் கொஞ்சம் பயிற்சி செய்துகொள்.”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்கு புரியவல்லை, மேஜர்”

பிரிகேடியர் சுதர்லாண்டுக்கு விஷயங்கள் சிறிது புரிவது போலிருந்தது. அவர் இழுவைப்படகிலிருந்து பார்க்கருக்கும், அவனிலிருந்து அலிஸ்ரருக்கும் பார்வையைச் செலுத்தியதோடு அவருக்கு மொசாட் அலியாபெற்றிடம் தான் தயாரற்ற நிலையில் அகப்பட்டு விட்டதை உணர்ந்து கொண்டார். அவர் வெட்கித்துப் போனார்.

கைரேனியாப் பகுதியின் கொமாண்டர் வந்து இன்னம் பத்து வினாடிகளில் கப்பலில் ஏறும் பிரிவுகள் தயாராகி விடும். இருநூறு வீரர்கள் இருப்பார்கள். இங்கிருக்கும் மீன்பிடி இழுவைப் படகுகள் சிலவற்றை அவர்களை ஏற்றிச் செல்ல எடுத்திருக்கிறோம். அவர் சொன்னது எதுவும் சுதர்லண்டின் காதில் கூட விழவில்லை.

“எங்கே நான் கேட்ட ஒலிபெருக்கி எங்கே?”

பத்து நிமிடங்களுக்குப் பிறகு சுதர்லண்ட் ஒலிபெருக்கி ஒன்றைக் கையில் பிடித்திருந்தார் துறைமுகத்தை மௌனம் சூழ்ந்து கொண்டது. கப்பலில் ஏறும் குழுவினர் எக்ஸோடசுக்காகத் துறைமுக நடுப்பகுதிக்குச் செல்ல ஆயத்தமாக இருந்தனர். எதிரொலிகளிடையே சுதர்லண்ட்டின் குரல் ஊடறுத்துச் சென்றது. “ஹெலோ.. கப்பலில் இருப்பவர்களே! இது பிரிகேடியர் புரூஸ் சுதர்லாண்ட் சைப்பிரசின் கொமாண்டர் பேசுகிறேன். நான் பேசுவது உங்களுக்குக் .கேட்கிறதா?”

எக்ஸோடசின் செலுத்தும் அறையில் அரி பென் கனான் தன்னுடைய ஒலிபெருக்கியைப் பாவனையில் ஈடுபடுத்தினான். “ஹெலோ சுதர்லாண்ட் இது மாட்சிமை தாங்கிய மன்னர்பிரானின் சைப்பிரசுக்கான யூதப் படைப்பிரிவின், 23வது போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த கப்டன் கலெப் மூர் உங்களுடைய ட்ரக்குகளை மவுண்ட் ஹிலேரியன் அருகே காணலாம்.”

சுதர்லாண்ட் வெளிறிப்போனார். அலிஸ்ரரின் வாய் அதிர்ச்சியில் திறந்து தொங்கியது.

கோபத்தோடு வெடித்தகுரலில் சுதர்லாண்ட், “ஹெலோ அங்கிருப்பவர்களே கப்பல் செப்பனிடும் பகுதிக்குத் திருப்ப உங்களுக்குப் பத்து நிமிடங்கள் தருகிறேன். நீங்கள் வராவிட்டால் நன்றாக ஆயுதம் தரித்த குழுவொன்றை உங்களை இங்கேகொண்டு வர அனுப்பப் போகிறோம்.”

“ஹெலோ சுதர்லாண்ட், இது எக்ஸோடஸ். இந்தக் கப்பலில் முந்நூற்றி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்களுடைய இயந்திர அறைகள் டைமைற்றால் நிரப்பப்பட்டுள்ளன. உங்களுடைய துருப்புக்களில் யாராவது இங்கு கால் வைக்க முயன்றால் அல்லது உங்களுடைய துப்பாக்கிகளில் ஒன்றிலிருந்து ஒரு ரவையாவது சுடப்பட்டாலும், நாங்கள் எங்களையே தகர்த்துக் கொள்ளுவோம்.”

அந்தக் கணத்தில் மார்க் பார்க்கரின் அறிக்கை உலகின் மூலை முடுக்கெங்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. சுதர்லாண்ட, அலிஸ்ரர் மற்றும் ஐந்நூறு இராணுவ வீரர்களும் திகைத்து நிற்க எக்ஸோடஸின் கொடிக்கம்பத்தில் கொடி ஒன்று ஏறியது. அது ஒரு பிரிட்டிஷ் யூனியன் ஜாக். (Union Jack - பிரிட்டிஷ் தேசியக் கொடி) அதன் நடுவில் நாசி ஸ்வஸ்திக்கா (Swastika- ஸ்வாஸ்திக்கா ஜேர்மன் நாசிகளின் சின்னம்) பெரிய அளவில் வரையப்பட்டிருந்தது. எக்ஸோடஸ் யுத்தம் ஆரம்பமாகியது.

தொடரும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

### அன்புச் சகோதரமே!

மடுப்பகுதியில் இருந்து வந்த தகவல் ஒன்று புலம்பெயர் தமிழர்கள் அனைவருக்கும் அதிர்ச்சி அளித்துள்ளது. சில மாதங்களுக்கு முன் அப்பகுதிக்கு கிறிஸ்தவ ஆயர் ஒருவரின் தலைமையில் புத்த பிக்குகள் சிலரும் அடங்கிய சமாதானக்குழுவொன்று வந்து தமிழ் மக்களை சந்தித்து திரும்பியமை நீயறிவாய். இவர்கள் சந்திரிகாவுடன் தமிழ்மக்களின் நிலைமைகளை எடுத்து விளக்கியதாகவும் அவர் தொடர்ந்தும் யுத்தத்தை நடாத்தியே தீர்வு காணப்போவதாக அறிவித்ததாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதையும் நீயறிவாய். சந்திரிகா தமிழ்ப்பகுதிகளுக்கு வரும் அதிகாரமற்றவர்கள் எடுக்கும் முயற்சிகளை எல்லாம் தமது அரசாங்கத்தின் சமாதான நோக்காக போக்காக வெளிநாடுகளுக்கு பரப்புரை செய்து வருவது இலங்கைத்தீவின் சமீபகால வரலாறு. இந்த வரிசையிலேயே இந்த மதகுருமாரின் தூதுக்குழுவின் கதையும் முடிந்து விட்டது என்று தான் நிறைத்திருந்தோம். ஆனால் இந்த பரப்புரைத் தந்திரத்துக்கு அப்பால் இராணுவ உளவு வேலைகளுக்கும் இத்தகைய சமாதானக்குழுக்கள் சிறீலங்காவால் பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை தற்பொழுது உறுதியாகியுள்ளது. மடுவை சிறீலங்காப் படைகள் ஆக்கிரமித்ததன்பின் முன்னர் பௌத்த பிக்குகளாக வேடமிட்டு வந்த இரு இராணுவத்தினர் மடுப்பகுதியில் இராணுவ உடையில் இருப்பது கண்டு தமிழ் மக்கள் பலர் அதிர்ச்சியடைந்துள்ளனர். இவர்களை அழைத்து வந்த கிறிஸ்தவ ஆயருக்குகூட இவர்கள் பிக்குகள் இல்லை என்பது தற்பொழுதுதான் தெரியும் என்றும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. எதுஎப்படியிருப்பினும் சமாதானம் என்ற சொல் சிறீலங்கா அரசாங்கத்தால் தனது இராணுவ நலன்களை பெருக்குவதற்கான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மை மட்டும் மீண்டும் உறுதியாகியுள்ளது. இவ்வாறு கேவலமான முறையில்தான் 1995ல் சந்திரிகா சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை முன்முயற்சிகளையும் அணுகினார். அன்றும் இன்றும் சந்திரிகா அதிகாரமற்றவர்களை சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாத நிர்வாக அதிகாரிகள் மதகுருமார் போன்றவர்களைத் தமிழர் பிரச்சினையின் தீர்வாளர்களாக உலகிற்கு காட்டி தமது அரசாங்கம் தமிழர் பிரச்சினையில் சமாதானத் தீர்விலும் அக்கறையுள்ளதுபோல் நடித்து வருகிறார். இந்த நடிப்பின் பின்னணியில் சிறீலங்கா இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான இராணுவ நோக்குகள் நிறைவேற்றப்படுகிறது என்பதை இலங்கைத்தீவின் சமீப கால வரலாற்றை நன்கு அறிந்த அனைவரும் தெளிவாக புரிந்து கொள்வர். சந்திரிகா உலகின் எந்த ஒரு நாட்டுத் தலைவரும் இது வரை செய்யாத இத்தகைய செயல்களைச் செய்து 'சமாதானம்' என்ற சொல்லின் புனிதத்துவத்தையே நாசமாக்கி வருகின்றார். இதனால்தான் தனது படைகள் தமிழர் தாயகத்தில் நடாத்தும் இனஅழிப்பு நோக்கிலான இராணுவ நடவடிக்கைகளை எல்லாம் நாக்கூசாமல் சந்திரிகா தமிழர்களுக்கு தான் சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக திரிபுவாதம் செய்து வருகின்றார். தமிழர்களுக்கு உணவையும் மருந்தையும் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளையும் கூடத்தடுத்து மறுத்து அவர்களை இனஅழிப்புக்கு உள்ளாகவைக்கும் சந்திரிகா – தமிழ் மக்களின் பல இலட்சக்கணக்கான குடியிருப்புக்களையும் பள்ளிகளையும் கோவில்களையும் வைத்தியசாலைகளையும் வர்த்தகநிலையங்களையும் குண்டுகளாலும் எறிகணைகளாலும் இடித்துத் தள்ளி தமிழ் மக்களின் தாயகத்தின் உட்கட்டுமானத்தையே உருக்குலைக்கும் சிறீலங்கா – சிறீலங்காவால் காணாமல் போன தமிழ் மக்களை மனிதக்குழிகளில் மண்டை ஓடுகளாக காணும் கொடுமையை அவர்களின் உற்றார் உறவினர்களுக்கு ஏற்படுத்தி வரும் சந்திரிகா அரசாங்கம் – இத்தகைய செயல்களைத் தான் தமிழர்களுக்கு சமாதானப் பரிசாக வழங்கி வருகிறது. ஆனால் உலக நாடுகளிடை தான் தமிழ் மக்களின் பகுதிகளில் புனர் நிர்மான வேலைகளைச் செய்வது போல் காட்டி உத்விகளையும் நிதியளிப்புக்களையும் பெருக்கி அவற்றை தனது யுத்தச் செலவீனங்களை ஈடுசெய்ய வேறு வழிகளில் பயன்படுத்தி வருகின்றது. உலக உதவிகள் தமிழீழ மக்களின் இன அழிப்புக்கு சிறீலங்காவுக்கு பேருதவியாக உள்ளது. இவைகளை எல்லாம் எடுத்து விளக்கி தமிழ் மக்களின் உயிர் வாழும் உரிமையை– உடமைகளைப் பேணும் தன்மையை– சுதந்திரத்தை– உறுதிப்படுத்த உதவுமாறு உலக மக்களைக் கேட்க வேண்டிய நேரம் இது. தமிழர்களின் உயிர் உடமை சுதந்திரம் மூன்றுமே அச்சத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருதற்கு முதல் முழுக்காரணம் சிறீலங்காவின் படைகள் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமித்து நிற்கும் நிலைமையே. இந்த படைகளை நிலைப்படுத்துவதற்கான சிறீலங்காவின் முயற்சிகள் தமிழர் இனக்கொலைகளுக்கு வித்தாகின்றது. எனவே சிறீலங்காவின் பாதுகாப்பு படைகள் தமிழர் தாயகத்தில் இருந்து உடன் வெளியேற வேண்டும் அல்லது விரட்டி அடிக்கப்படல் வேண்டும். இந்த உண்மையை உலகிற்கு எடுத்து உரைக்கும் தமிழீழ மக்கள் குரலாக புலம் பெயர் தமிழர்கள் ஆகிய நாம் திகழவேண்டும். வான்படை கொண்டு சிறீலங்கா நடாத்தும் அழிப்புக்களை வான்படை கொண்டே தமிழர்களும் எதிர்க்கப்புறப்பட்ட புதிய யுகம் தமிழீழ வான் மீண்டும் சுதந்திர வானாக மாறி வருகிறது என்ற உண்மையை தெளிவாக்கி நிற்கிறது. இந்த வான்படையின் வளர்ச்சி எழுச்சி புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நமது உழைப்பு அளிப்பிலேயே தங்கியுள்ளது. நாம் நாளொன்றுக்கு ஒரு மணி நேர உழைப்பை நாட்டுக்காக வழங்க உறுதி பூணுவோமானால் தமிழீழ விடுதலையின் விரைவை யாராலும் தடுக்க முடியாது.

**அன்பின் ஆசிரியர்**
**(17.06.1999)**




(10ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக் கொடுத்துவிடும்; ஓடமுடியாது; உடலில் வலுவில்லை; சூழவும் எதிரி.

முகமெங்கும் சேற்றை வாரிப் பூசியபடி கழுத்தளவு தண்ணீரில் பதுங்கினான். கையிலே குண்டுகள் ரவை துளைத்துப் பிய்த்திருந்த தசைகளப் பிடுங்கின மீன்கள். அசையவே முடியாதிருந்த அவனின் காயம் மீன்களால் மேலும் ஆழமாகிறது. பெரும் இரத்த வெளியேற்றம், உணவின்மை, காயத்தைத் துளைக்கும் மீன்கள் - அவன் மயங்கி விடுவான் போலிருந்தது. ஆனால் அது கூடாதே சூழவும் எதிரி, யாராவது கண்டு விட்டால் குமுதண்ணை இட்ட பணி என்னாவது? மனதை இறுகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான் அவன்.

மாலை மணி 3.00. சூழ்ந்திருந்த படைகள் விலகி நகர்ந்தன. அருகேயிருந்த பிரதான முகாமுள் புகுந்தன.

மெல்லப் புறப்பட்டான் அவன் உடலால் இயலவில்லை. தண்ணீரில் அதிக நேரம் கிடந்து விறைத்திருந்தது. தடியொன்றை ஊன்றியபடி கண்முன்னே கரும்புலி வெடித்த பற்றைக்கருகே வந்தான். அங்கே இலக்கத்தகடு மாத்திரம் இரத்தம் தோய்ந்து கிடந்தது!

அதைப் பத்திரப்படுத்தியவன் மீண்டும் நகர்ந்தான்.

இனிப் பழையபாதைகள் பாவிக்க முடியாதவை; புதிது தேடவேண்டும் நிற்கும் இடம் எதுவென்றும் தெரியவில்லை. உடல் தளர்ந்து வருகிறது தலை சுழன்று கண்களில் வெள்ளிகள் மின்னின கண்கள் சொருகி தேகம் நடுங்கி அவனையும் மீறி மயக்கம் சூழ்கிறது அருகேயிருந்த பற்றை ஒன்றினுள் படுத்துக்கொண்டான்.

மறுநாள் காலை 7.00 மணி தளர்ந்த உடலை ஓய்வினால் தேற்றியவன் எல்லா வலிகளையும் பொறுத்துக்கொண்டே நகர்ந்தான்.

இத்தனை வேதனைகள் சுமக்கும் போதும் அவனுள் உறுதி- தனக்கிடப்பட்ட பணியை சரி வரச் செய்ய வேண்டும், எனவே தான் சாகக்கூடாது!

மெல்ல மெல்ல ஓயாது நகர்ந்தவனை திரும்பப் பற்றியது மயக்கம் மெல்ல மறைவிடம் ஒன்றில் ஒதுங்கினான் அது எறும்புகளின் உறைவிடம். ரவையும் மீன்களும் விளையாடிய உடலை அவையும் துளைத்தன அரித்தன அவனுக்கோ அசையவே முடியாது எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டான்.

அந்த வேளைகளிலெல்லாம் அவன் முன் படமாய் விரிந்தான் குமுதன். 52 தரமே துடிக்கும் இதயம் ஆனாலும் தளராத உறுதி, தனது அணிவீரர்களது அக்கறை, பற்று, பாசம் எல்லாவற்றையும் விட கொள்கையில் உறுதி தலைவனில் அன்பு.

வழியனுப்பிய தலைவர்- தமிழினத்தின் துயரச் சிலுவையைச் சுமக்கும், தேசத்தின் கனவைத் தாங்கும் தலைவர், தேசத்தின் புயல்களை உருவாக்கும் தலைவர்.

மாலை மங்கி இருள் சூழ மெல்ல எழுந்தான் தடியொன்றை ஊன்றி நகர்ந்தவன்- தாக்குதலுக்குமுன் தங்கிய இடத்தைக்கண்டான், அங்கிருந்து நகர்ந்து எதிரியின் நிலைகளைப் பார்த்துப் பார்த்து இடைவெளி கண்டு அதன்வழி நகர்ந்து வெளியே வந்து சேர்ந்தான்.

கொண்டுவந்த தகடும், குண்டும் போராளிகள் கையில் சேர அவனுடல் மயங்கித் துவண்டது.

அவன் தேசத்தின் விடியல் கனவு சுமந்து முன்னர் வீழ்ந்த வீரரை நினைந்து இன்றும் காத்திருக்கிறான் அடுத்த களத்துக்காக.

*குறிப்பு: இந்தக் கரும்புலி வீரன் நொந்து சுமந்துவந்த செய்தியால் அன்று அடையமுடியாமற்போன இலக்கு, 26-09-98 இரவில் வெற்றிகரமாகத் தகர்த்தெறியப்பட்டது.*

## இறந்து போன இலக்கின் கதை

ஜெயசிக்குறு.
இட்ட பெயரே
கெட்ட பெயராகி
இறந்து போனதொரு
இலக்கின் கதை.
பிறந்து விட்டதொரு
புலியணியின் சாதனை.
பொறு பொறு
உனக்கும் சாதனை தான்
இழப்புக்களால் மட்டும்.
நேற்றுவரை உலகையேய்த்து
நீ போட்ட காட்டுக் கூத்து
காட்சிமாறி
கலைந்து போனது
காற்றோடிங்கு
வரிந்து கட்டி வாளெடுத்து;
வலியவந்து வம்புக்கிழுத்து,
வாயில் மட்டுமல்ல,
வாங்கிக்கொண்டாய்
குண்டியிலும் நல்லகுறி
ஜெயசிக்குறி
நீ வந்து குதித்தது
வன்னியின் நெருப்பாறு
நீந்திக் கடப்பது
புலிகளுக்கேரியுத்தானது
புதிதும் புதிருமுனக்குத்தான்
புலிகளுக்கல்ல; புரிந்துகொள்
தானைத் தலைவன் தானிருக்கும்
வரை
தமிழீழ மண்ணதில்
நீ கால்வைக்குமிடமெங்கும்
தீ முளைக்கும்.
உனைச்சுட்டெரிக்கும்
வணங்கா மண் மகிழ்ந்து
சிரிக்கும்.

– நாதவலை மனோரஞ்சிதன்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அலை முகம்

மேய்ச்சல் தரைகளில்
இருந்து வரும்
தொலைதூர சங்கீதங்களை
தூக்கி விட்டவர் யார் ?
அதோ எதிரலைகள்......!

இசையால்
நிறைந்த
வாழ் வெளி எங்கே?
தேடல் அலைகள். . . !!

கிழக்கை நோக்கி விழுந்து
மண்ணை உச்சி மோந்து
ஆச்சி எழும்புகின்ற போது
அருவியாய் கண்ணீர்
ஏன் சொரிகின்றாள்?
பெருமூச்சலைகள். . . .!!!

ஆனந்தமாய்
வீற்றிருக்கின்ற
நகரத்தை
பேய்கள் பிடித்து
எங்கனம் உலுப்புகின்றன . . .!?
. . . விடுபட. . . மீண்டும் அலைகள். . . .!!!!

தொன்மை மிகு நகரின்
அழகு பருகிட. . .
ஆவென்று காத்திருக்கின்ற
பீரங்கிக் குழாய்கள். . . ?
. . . அலைகளோ அலைகள் . . .!!

சந்திரிகா
வெள்ளைப் புறாக்களுள்
கழுகை மறைத்தனுப்பும்
காட்சிகள் ஏராளம். . .??

எம் நகரின் மேல்
இருள் மெல்லப் படருகையில் – அது
முதிய கிழம் போல
முனகி அனுங்கும் ஒலியை
விளம்பாதிருக்க
காற்றுக்குத்தான்
என்ன செய்தாள் – அந்த
மாயக் காரி.. ?
அலைகள்.. அலைகள் . . அலைகள். . .

அதோ!
விண்ணைத் தழுவுகின்றது
அலையின் கரங்கள். . !

அதோ. . !
தீரா வாஞ்சையோடு
மண்ணை முத்தமிடுகின்றன
அலையின் முகங்கள் . . !!

பேரோசையோடு
அலைகள் எழுந்து போகையில்
அச்சத்தைச் சாகடித்து
அக வாழ்வின்
அற்புதங்களும் கூடக் காட்டி. . .!!!

அலையே. ...
பேரலையே. ......!
வாழ்வின் ஊற்றுக் கண்களை
திறந்திட – நீ
எழுந்தாயிற்று.
அலையே......!
என்றும் நீ ஓயாமல்
பாடிக் கொண்டிருப்பாயா......?
காலம் காலமாய்......?
கவி இருளின்
வான முகட்டை – நீ
அசைப்பதற்கான அதிர்வை
பூமியில் பிரசவித்துக் கொண்டேயிருப்பாயா...?



அதோ.....!
காலப்புயல் குதிரையின்
புஜங்களை தொட்டு
அணைத்தபடி
மனிதத்தை மீட்டுவர
நேயமிகு புலிகள்
வானத்தை வில்லாய்
வளைத்து
ஏழு நிறக்கதிர்கள்
தீட்டி.....!!?
கவி விழ..........
– இடி விழ
– நெரி பட
– அடி விழ
– துடி பட
– கவி விழுந் தாயிற்று......
தமிழீழ மாதோ எழுகின்றாள்!

மீண்ட
எம் நகரங்கள்
மீள
ஒளிரும் மின் மினிகள்
மெல்ல
கண் சிமிட்டிச் சிரிக்கின்றன.
முன்னைத் துயரும்
பிரிவும் செந்நிறமாய்
மெல்லக் கசிகின்றன.
தோணிகள்
சுந்தரம் பாட்டோடு
பாய் விரிக்கின்றன.
அலைக் குதிரைகள்
பொங்கிச் சிரிக்கின்றன.
ஓயாமல்.....
ஓயாமல்.....

**கூத்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்